புக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 15 புதன்கிழமை (28-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:122

# விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை மட்டக்களப்பில் தீவிரப்படுத்த முஸ்தீபு!

## புலிகளின் முகாம்களில் இருந்து விலகியிருக்க மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு,மார்ச்28

**மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிலைகளின் மீது பெரும் எடுப்பில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட இருப்பதாகப் பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.**

**அதிநவீன போர் விமானங்கள் மற்றும் ஆயுதங்களின் உதவியுடன் இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட இருப்பதால் புலிகளின் முகாம்களில் இருந்து நான்கு கிலோ மீற்றருக்கு அப்பால் பொதுமக்கள் விலகியிருக்க வேண்டும் எனவும் படையினர் அறிக்கை ஒன்றின் மூலம் மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.**

பாதுகாப்புப் படையினரின் இந்த அறிக்கை அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

"படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் வழங்கிய தகவல்களைக் கொண்டே புலிகளின் முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் பயணப் பதிவு மட்டுப்படுத்தப்பட்டது

### அவசர தேவைகளுக்கு மட்டும் இடம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

பலாலி - இரத்மலானை விமான சேவையில் பயணம் செய்வதற்கான பதிவுகளை, இங்கிருந்து அவசரத் தேவைகளுக்குச் செல்லவேண்டியோர் மட்டுமே இப்போதைக்குச் செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து இருவழி பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டு இங்கு வந்து சேரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும -

இதனால் அவ்வாறு திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுடன் வரும் பயணிகளுக்கு இங்கிருந்து செல்லும் விமானங்களில் அதிக இடங்களை ஒதுக்கவேண்டியிருப்பதாகவும் -

இதன் காரணமாக இங்கு பயணச் சீட்டைப் பெற்று, இங்கிருந்து கொழும்பு செல்வோருக்கு விமானங்களில் அதிக இடங்களை ஒதுக்க முடியாது இருப்பதாகவும் - சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே -

நோயாளர்கள், மரணச்சடங்கில் பங்குபற்றச் செல்வோர், அவசர வேலை நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் ஆகியோருக்கு மட்டும் இப்போதைக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

இது ஒரு தற்காலிக ஏற்பாடு

(14ஆம் பக்கம் பார்க்க)

### நிமலராஜன் கொலை

## 4ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்க பொலீஸாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,மார்ச்28

பத்திரிகையாளர் ம.நிமலராஜன் கொலை தொடர்பாக ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு முன் நீதிமன்றுக்கு ஆக்க பூர்வமான அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ்.பொலீஸாருக்கு கட்டளை பிறப்பித்தார் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா.

நிமலராஜனின் சடலத்தில் பிரேத பரிசோதனையை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரியிடம் வாக்குமூலம் பெறுமாறு சட்டமா அதிபர் தமக்கு அறிவுறுத்தியிருப்பதால் அதற்கு அனுமதி வழங்குமாறு யாழ. குற்றத் தடுப்பு பொலீஸ் பொறுப்பதிகாரி யாழ்.நீதிவானிடம் விண்ணப்பித்தார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாவனைக்கு உதவாத 2,500 தொன் அரிசியை திருப்பி கொழும்புக்கு அனுப்புமாறு உத்தரவு

யாழ்.மாவட்டத்திலுள்ள பொது மக்களுக்கு விநியோகிக்கவென அனுப்பப்பட்டு மனித பாவனைக்கு உதவாது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 2,500 மெற்றிக் தொன் அரிசியையும் கப்பல் மூலம் திருப்பி அனுப்புமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் யாழ். அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமான பிரிப்பதி சூரியாராய்ச்சி யாழ்.அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணமாக வழங்கவென அனுப்பப்பட்ட அரிசியில் 2,500 மெற்றிக்தொன் அரிசி மனித பாவனைக்கு உதவாதது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எமது அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த அரிசியைக் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பவும் - என்று அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## பத்திரிகையாளர் திருச்செல்வம் நாளைமறுதினம் விடுதலையாவார்?

கொழும்பு,மார்ச்28

கடந்த டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வத்தை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு சிபார்சு செய்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தாம் சட்டமா அதிப

(14ஆம் பக்கம் பார்க்க)

## நேரடிப் பேச்சுக்கான திகதியை புலிகளிடம் அரசு எதிர்பார்க்கிறது

### அமைச்சர் டி.எம்.ஜயரத்ன கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்28

நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதியை விடுதலைப்புலிகள் இன்னமும் தரவில்லை. அதை எதிர்பார்த்து அரசு காத்துக்கொண்டிருக்கிறது என்று அமைச்சரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பு செய்தி வட்டாரங்களுக்கு தகவல் வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம் தொடர்பான அறிவிப்பை விடுக்கின்றார்கள். ஆனால் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வருகிறார்கள் இல்லை.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பை மாற்றி, தேசிய அரசு அமைத்து 3ஆம் தரப்பு உதவியுடன் புலிகளுடன் பேசுக!

### ஜனநாயகக் கூட்டமைப்பு அவசர வேண்டுகோள்

கொழும்பு,மார்ச்28

☆ அரசமைப்பில் சீர்திருத்தம் மேற்கொண்டு, உடனடியாகத் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டும். இல்லையேல் நாடு பாரிய அழிவை எதிர்கொள்ளும்.

☆ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை அரசு உடன் ஆரம்பிக்கவேண்டும் -

மேற்படிக் கோரிக்கைகள் உட்பட 11 கோரிக்கைகளை சகல அரசியல் கட்சிகளிடமும் நேற்றுச் சமர்ப்பித்தது ஜனநாயகக் கூட்டமைப்பு.

'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன், பிரபல பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரிய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார உட்பட முக்கிய பிரமுகர்கள் அங்கம் வகிக்கும் இந்தக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என சுமார் 50இற்கும் அதிகமானோர் பங்குபற்றினர்.

தற்சமயம் நாடு மிகவும் மோசமான நிலையில் சென்றுகொண்டிருப்பதால், நாட்டைக் காக்க சகல அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று கூட்டமைப்புக் கோரிக்கை விடுத்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டைக் காக்க அரசியல் கட்சிகள் முன்வராவிட்டால் அவை எதிர்காலச் சந்ததிக்கு துரோகம் செய்தவைகளாகக் கருதப்படும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கூட்டமைப்பு விடுத்துள்ள கோரிக்கைகளில் சில வருமாறு:-

☆ இன்றைய பிரச்சினைக்கு மூலகாரணமான - தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களின் அபிலாஷைகள் ஆகியன மதிக்கப்பட்டு அதற்கேற்ற வகையில் தீர்வு காணப்பட வேண்டும்.

☆ சுதந்திர தேர்தல், நீதி, பொதுச் சேவை, பொலீஸ் ஆணைக்குழுக்கள் உடன் அமைக்கப்படவேண்டும்.

☆ பேச்சுச் சுதந்திரத்தை நிலைநாட்ட சகலரும் ஒன்றுபட வேண்டும். (உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விஜேயின் புதிய ஓடியோ CD வெளியீடுகள்

இளையதளபதி விஜயின் பத்ரி

பக்திப்பாடல் CD வெளியீடுகள்!

☆ உன்னிகிருஷ்ணனின் "அபிஷேகம்"
☆ வீரமணிகண்ணனின் "ஆயிகுமாரி"
☆ S.P.B. சுவர்ணலதா குரல்களில் "கோகுலக்கண்ணா"
☆ வீரமணிதாசனின் "முருகன் பாடல்கள்"
☆ சக்திதாசனின் "செவ்வாடைக்காரி"
☆ சக்திதாசனின் "காவடியாட்டம்"
☆ ஹரிணியின் "அம்மனுக்கு பூச்சாட்டு"
☆ வீரமணிதாசனின் "கணபதிபாடல்கள்"
☆ புஸ்பவனம் குப்புசாமியின் "ஆத்தாடி மாரியம்மா"
☆ மகாநதி ஷோபனாவின் "இஷ்டதெய்வங்கள்"
☆ சுதா ரகுநாதனின் "ஸ்ரீ ஸ்ரீனிவாசம்"
☆ மகாநதி ஷோபனாவின் "மாரியம்மன் தாலாட்டு"
☆ மகாநதி ஷோபனா, ஹரிணி, புஸ்பவனம் குப்புசாமி வீரமணிதாசனின் குரல்களில் "108போற்றி"
☆ வீரமணியின் "ஸ்ரீ கணபதியும் காக்கும் தெய்வங்களும்"
☆ ஹரிணியின் "ஸ்ரீ வெங்கடேஸ்வர சுப்ரபாதம்"

"இன்னிசை உலாவரும் இன்ப இசைச் சோலை"

விஜேய் றெக்கோடிங் சென்ரர்

539,பருத்தித்துறை வீதி,நல்லூர்.

கிளை:- பிரதான வீதி, மானிப்பாய். (85973)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி நகுலேஸ்வரி தம்பிமுத்து

அரியாலை, தபாற்கட்டைச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி நகுலேஸ்வரி தம்பிமுத்து நேற்று (27-03-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காட்டர் தம்பிமுத்து என அன்பாக அழைக்கப்படும் தம்பிமுத்து - இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் கருணாகரன், தயாநிதி-அமரசிங்கம், சரோஜினி, சாந்தநாயகி - சோமசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 418, நாவலர் வீதி, மாம்பழம் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (28-03-2001) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் (பழைய நேரம்) தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லபபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல:-
திருமதி சாந்தநாயகி சோமசேகரம்
(சகோதரி)

தற்காலிக முகவரி:-
*இல.418,நாவலர் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(85966)

## கந்தப்பு குமாரசாமி

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த கந்தப்பு குமாரசாமி அவர்கள் 23-03-2001 அன்று காலமானார்.

அன்னார் உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவரும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபை உறுப்பினரும் யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் சுதேசிய கலாமன்றத்தின் உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-03-2001) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருளன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி.மகாலிங்கம்
(நண்பன்)

*சரஸ்வதி சனசமூக நிலையம்,*
*உரும்பிராய் வடக்கு.*

(85975)

## தலையில் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

மது போதையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் தலையில் பலத்தகாயங்களுக்குள்ளான நபர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பகல் தாவடி கள்ளுத் தவறணையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த பி.ஞானரட்ணம் (வயது 44) என்பவரே தாக்குதலுக்குள்ளானார்.

(உ-10-ரி)


## தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில பணிபுரிய தொலைபேசி இயக்குநர் தேவை. 30.03.2001 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்குப் பின் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

162, ஸ்ரேசன் வீதி,
கொக்குவில் கிழக்கு. (85967)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
விஜயகாந்த்,
மீனா, பிரபுதேவா
நடித்த (C/15741)
வானத்தைப் போல
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

நாகம்ஸ் (85919)
சுன்னாகம்
அஜித்,
கார்த்திக், மீனா
நடித்த
ஆனந்தப் பூங்காற்றே
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.)

லஷ்சுமி இணுவில்
கடைசி வாரமாக
விஜயகாந்த் (3வேடங்களில்)
மந்த்ரா, செந்தில் நடிப்பில்
சிம்மாசனம் (85920)
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

சாவகச்சேரியின்
தலைசிறந்த புடைவை ஸ்தாபனம்
யாழ்.நகரில் இன்று

# மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் பங்குனிமாதம் 15ஆம் நாள் இன்று (28.03.2001) புதன்கிழமை காலை 10.48 – 12.00 மணி வரையிலான சிங்க லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில் எம்மால் புதிதாக



வாணி ரெக்ஸ்

VANI TEX



புடைவை வியாபார ஸ்தாபனத்தை இலக்கம் 81, பெரியகடை, யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்க இறைவன் அருள்பாலித்துள்ளதால் இத்திறப்பு விழாவுக்கு நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வணிகப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து ஆசிகூறி விழாவைச் சிறப்பித்து ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எழில் மிகு ஆடைத் தெரிவுகளுக்கு உங்கள் உள்ளம் கவர்ந்த

வாணி ரெக்ஸ்,

இல.81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(85971)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
க.பொ.த. (உ/த) - 2003 அனுமதி
கலைப்பிரிவில் வெற்றிடங்கள் உள்ளன.

பாடங்கள்: தமிழ்
இந்துநாகரிகம்
அளவையியல்

10.04.2001 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

(C/15946) -அதிபர்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திருமதி செல்லம்மா பத்மநாதன்

எமது பாடசாலை அதிபர் திருமதி செல்லம்மா பத்மநாதன் அவர்கள் மேல் மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற இவ்வேளையில், அவரது நிர்வாகத் திறனையும், சேவையையும் பாராட்டுவதோடு, அவர் இலங்கை அதிபர் சேவையின் தரம் 1இற்குப் பதவி உயர்வு பெற்றமை குறித்தும் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஆசிரியர்கள், மாணவர்கள் -
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

(85968)


சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும்

கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(Setup Game)

விலகல் முறையில் நடைபெறவுள்ள மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவம் பெறும் இடங்கள்:
- அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட் - கஸ்தூரியார் வீதி.
- TRRO - மருதனார்மடம்.

விண்ணப்ப முடிவு திகதி: 04.04.2001
ஒழுங்கமைப்புத் திகதி: 05.04.2001
அனுமதிக்கட்டணம் ரூபா 100/-

அனுசரணை:~
கல்யாணி கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம். (C/15945)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 - 07 - 1926

உதிர்வு 08 - 04 - 2000

## அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை

திதி : சதுர்த்தி 28-03-2001

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த நீங்கள்
எங்களை விட்டுப்பிரிந்து ஆண்டு ஒன்று
சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சமதில்
என்றும் நீங்காதிருக்கும்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*4/3, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

திருமதி க.நாகபூசணி (மனைவி),
பரமநாதன் குடும்பம்.

(85958)

# உதயன்

## நீலிக் கண்ணீர்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில், ஏழாயிரத்து 478 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமலும் பாடசாலையில் இருந்து விலகியும் உள்ளனர் என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

பொருளாதாரத் தடை மற்றும் ஷெல், விமானத் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வு ஆகியவை உருவாக்கிய வறுமை நிலையே இதற்கு முக்கிய காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தில் நேரடியாகப் பங்குபற்றும் காரணத்தாலும், யுத்தப் பயிற்சி காரணமாகவும் கூட இளம் மட்டத்தில் ஒரு தொகுதியினர் பாடசாலைக்குச் செல்லாமல் தவிர்க்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.

இந்த விடயம் அரசியல், சமூகச் சூழ்நிலைகள், வரலாற்றுக் கடமை — பொறுப்பு, சமூகத்தின் — இனத்தின் — எதிர்காலம் ஆகியவற்றின் பின்னணியில் ஆராயப்பட வேண்டியது.

அத்தோடு இந்தக் காரணத்துக்காகப் பாடசாலைக் கல்வியைக் கைவிடுவோர், அந்தக் கல்வியின் தொடர்ச்சியை புதிய சூழலிலே தொடர்கின்றார்களா என்பதும் அவதானிக்கப்படக் கூடியதுதான்.

என்றாலும் பொதுவாக இளம் பருவத்தில் கல்வி கற்பதற்கான அடிப்படை உரிமையை அந்தப் பருவத்தினருக்கு நாம் தவறாது வழங்கித்தான் ஆக வேண்டும்; வாய்ப்பைத் தடுக்காது கொடுத்துத்தான் ஆக வேண்டும். அது அரசாங்கம் என்றாலும் சரி — இன விடுதலைக்காகப் போராடும் இயக்கமானாலும் சரி — இந்தச் சமூகப் பொறுப்பிலிருந்து விலகி விட முடியாது.

அரசின் நடவடிக்கையே நம் இளம் பருவத்தினரின் கல்விப் பாதிப்புக்கு — அவர்களுக்கு நாம் அடிப்படையாக வழங்க வேண்டிய கல்வி கற்பதற்கான உரிமை மறுக்கப்படுவதற்கு — முக்கிய காரணமாக இருக்கின்றது என்பது மிகவும் வேதனைக்குரியது.

தனது மக்களுக்கு— தனது இளம் சமூகத்துக்கு கல்வி கற்கும் அடிப்படைஉரிமையைமறுக்கச் செய்யும் 'பெரும் பணியை' தலைமேற்கொண்டு செயற்படுத்தியவாறு நாட்டின் கல்வி மேம்பாடு குறித்து அரசு பேசுவது வியப்புக்குரியது.

தனது பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி மேல்படிப்புக்கான உச்சவசதிகளை வழங்கிக்கொண்டு, ஆண்டுக்கு நான்கு தரம் விடுமுறைக்கு என்றும் — ஒய்வுக்கு என்றும் — லண்டனுக்குச்சென்று பிள்ளைகளின் கல்வி வசதி, வாய்ப்புக்களை நேரில் மேற்பார்வை செய்து கொள்கிறார் ஜனாதிபதி.

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களின் எதிர்காலப் பிரஜைகளான மாணவர்களின் கல்வி —குறிப்பாக வன்னிப் பிரதேச மாணவர்களின் — கல்விக்குத் தேவையான வசதிகள் செய்யப்படுவதில்லை.

இதனை மறைப்பதற்குச் சந்தர்ப்பம் பார்த்திருந்தது போல, வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் மற்றைய பிள்ளைகளின் கல்வித் தரம் வீழ்ச்சியடைய, பிரபாவின் பிள்ளைகள் மட்டும் நல்ல பெறுபேறு பெற்றிருக்கின்றார்கள் என்று கூறி அரசாங்க ஏடுகள் நீலிக் கண்ணீர் வடிக்கின்றன.

வன்னி மாணவர்களின்கல்வியில் அரசுக்கு உண்மையில் அக்கறை இருக்குமானால் அந்த மக்கள் மீதான பலவகை அழுத்தங்களையும் முதலில் விலக்கி அவர்களின் சகஜவாழ்க்கைக்கு அது வழி செய்யவேண்டும்.

---

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்

## கடந்த வருடத்தில் கைதான இரு இந்து குருமார் விடுதலை

கொழும்பு, மார்ச் 28

விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியின் அங்கியை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த விவேகானந்த சபையின் கோயில் குருக்கள், பரமேஸ்வரக் குருக்கள் அவரது மகனான கொட்டாஞ்சேனை கதிரேசன் ஆலயக் குருக்கள் நாகேஸ்வரசர்மா ஆகிய இருவரும் கொழும்பு உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

அரசியல் சாசனத்தின் 13 (1) பிரிவின் கீழ் தாம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது மனித உரிமையை மீறுவதாகச் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி இவர்கள் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மற்றும் நீதியரசர்கள் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, ஏ. இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் உயர் நீதிமன்றத்தில் கடந்தவெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பில் கைதான விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கொடுத்த தகவலினால் நாகேஸ்வர சர்மாவும் பரமேஸ்வரக் குருக்களும் 2000 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி கொட்டாஞ்சேனைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 13 (1) பிரிவின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த மூன்று மாதங்களாக இந்த விசாரணை கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

(க-15)

## குருநகரில் வெள்ளியன்று சிலுவைப் பாதை

குருநகரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பெரிய சிலுவைப்பாதை நடைபெற உள்ளது.

இந்தச் சிலுவைப் பாதை குருநகர் புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஆரம்பமாகி, குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நிறைவுபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை குருநகர் பங்குத்தந்தை பி. எவ். பொனிபஸ் அடிகள் மேற்கொண்டுள்ளார்.

---

## ஏற்பு வலியைக் குணப்படுத்த இலங்கையில்மருந்துகண்டுபிடிப்பு

### சர்வதேச ரீதியில் அங்கீகாரம்

கொழும்பு, மார்ச் 28

ஏற்புவலி நோயை இலகுவில் குணப்படுத்தக் கூடிய மருந்தொன்றை இலங்கையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் சர்வதேச ரீதியாக அறிமுகப்படுத்தியுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உணர்விழக்கச் செய்யும் முன்னாள் வைத்திய நிபுணர் திருமதி தீப்தி ஆட்டிகலயே இம்மருந்தைக் கண்டுபிடித்திருக்கின்றார்.

''மக்னீசியம் சல்பேற்'' என்ற பெயருடைய இம்மருந்திற்கு பிரிட்டன் உட்பட உலகின் அநேக நாடுகள் அங்கீகாரமளித்திருக்கின்றன.

இம்மருந்து குறித்து டாக்டர் திருமதி தீப்தி ஆட்டிகல தெரிவித்திருப்பதாவது:-

ஏற்புவலி நோய் காரணமாக உலகம் முழுவதும் வருடா வருடம் பத்து லட்சம் பேர் சராசரியாக மரணமடைகின்றனர். இந்நோய் மூன்றாம் மண்டல நாடுகளில் ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது.

இந்நோய்க்கு உள்ளாகின்றவர்களை செயற்கைச் சுவாசம் ஊட்டும் கருவியில் (Ventilator) சுமார் நாற்பது நாள்களுக்கு வைக்க வேண்டும். இக்கருவியில், இந் நோயாளர்களை வைக்கவென நாளுக்கு முப்பதாயிரம் ஸ்ரேலிங் பவுண் அளவில் செலவாகும்.

அதேவேளை இவ்வகையான செயற்கைச் சுவாசம் ஊட்டும் கருவிகள், மூன்றாம் மண்டல நாடுகளில் மிகவும் குறைவாகும். இக் கருவியின் துணையுடன் சிகிச்சையளிக்கப்படும் இந்நோயாளர்களில் 30 சதவீதமானோர் மரணமடைகின்றனர்.

ஆனால் ''மக்னீசியம் சல்பேற்'' என்ற இம் மருந்தை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும் முடியும். இம் மருந்தைப் பாவிக்கும் நோயாளர்களைச் செயற்கைச் சுவாசம் ஊட்டும் கருவியில் வைக்கவும் தேவையில்லை. நோய் சுமார் இருபது தினங்களில் குணமடைந்து விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

(க)

---


**யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

## உன் கருணை வேண்டுமையா

வண்ணை தனிலிருந்து அருள்புரியும் பெருமானே
வருந்துயர்கள் நீக்கிவிடும் ஆற்றலை அருளுமையா
அல்லல் பல சூழ்ந்து எம்மினத்தை வாட்டுதையா
நல்லவாழ்வு பெற்றிடவே உன் கருணை வேண்டுமையா

ஆழ் கடலில் மிதந்துவந்த ஆலத்தைக்
கொண்டவனே
ஆழ்கடலிற் தத்தளிக்கும் படகுபோல் ஆனோம்நாம்
திசைகாட்டி வழிநடத்த நின்னருளை நாடிநிற்கும்
திக்கற்ற எங்களுக்கு நின்கருணை வேண்டுமையா,

பாடுபட்ட நிலபுலமும் கோவிருக்கும் கோயில்களும்
குடியிருந்த வீடுகளும் படும்பாட்டை பாருமையா
நாடிருக்கும் நிலைப்பாட்டால் நாமடையும்
வேதனையை
ஓடிவந்து போக்கிடவே உன்கருணை வேண்டுமையா.

- சமூகஜோதி கா. கணேசதாசன்.

இன்று 10ஆம் திருவிழா


---

## தேசிய அடையாள அட்டைக்கான 10,000 விண்ணப்பங்கள் வந்தன

கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 10 ஆயிரம் தேசிய அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாக இந்தப் படிவங்கள் யாழ்ப்பாணத்தில் கிடைக்காமையால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

யாழ். செயலகத்திலுள்ள அடையாள அட்டைப் பிரிவிலிருந்து பிரதேச செயலர்களினால் இந்த விண்ணப்பப் படிவங்கள் எடுத்துச் செல்லப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(ம-5)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் தினமும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை ''தேவி பாகவதம்'' என்னும் தலைப்பில் ''சொல்லின் செல்வர்'' இரா. செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(க—ரி)

## மகோற்சவம்

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தில் சிவன் சாந்திக மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மகோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 5 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறவிருக்கின்றன.

(உ-3)

---

யுத்த அனர்த்தங்களால்

## கைதடி சித்த வைத்தியசாலை இயங்க முடியாத அளவு சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த மே மாதத்துக்குப் பின் கைதடியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் மற்றும் குண்டு வீச்சுக்களினால் கைதடி சித்த போதனா வைத்தியசாலை இயங்க முடியாத அளவுக்கு மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் விடுதிகள், நிர்வாக மற்றும் மருந்து அறைகள், சமையல்கூடம், தண்ணீர்த்தாங்கி போன்றவை பாவிக்க முடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளதாக அங்கு சென்று திரும்பிய வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்தனர். அங்குள்ள கட்டடங்கள் எவற்றிலும் கூரைகள் இல்லை தண்ணீர்த் தாங்கி முற்றாக உடைந்து வீழ்ந்துள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறியதாவது!

தளபாடங்கள், சமையல் உபகரணங்கள், மருந்துப் பொருள்கள், மருந்து உபகரணங்கள, ஜெனரேட்டர், தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் ஓட்டோ உட்பட அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் எதனையும் மீட்க முடியவில்லை.

அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் இடம் பெயரும் போது வைத்தியசாலையில் 12 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் இருந்தன. ஆனால் இப்போது அவற்றில் எதுவும் மிச்சமில்லை.

பிளாஸ்ரிக் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த மருத்துவ எண்ணெய் வகைகள் கொள்கலன்கள் வெடித்துச் சிதறியதினால் வெளியே பீச்சப் பட்டு இருந்தன.

வைத்தியசாலையில் இருந்து கழிவு நீரைச் சுத்திகரித்து அகற்றும் பகுதியும் முற்றாகச் சேதமடைந்துள்ளது. வைத்தியசாலைச் சுற்றாடல் முழுவதும் உடைந்து சிதறிய கண்ணாடிக் குவியல்களே காணப்படுகின்றன.

தற்போது இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வைத்தியசாலைச் சுற்றாடலில் பொது மக்கள் எவரும் செல்வதற்கு அனுமதிக்கப்படாத போதும் நாங்கள் இராணுவத்தினரின் அனுமதி பெற்று அங்கு சென்று சில தளபாடங்களை எடுத்து வந்தோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கைதடி சித்த போதனா வைத்தியசாலை தற்பொழுது சொக்குவிலில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ம 5)

## தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு

யாழ் மாவட்டத்தில் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சியில் சித்தியடைந்த 63 ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் தேசிய கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்டுள்ளன.

எதிர்வரும் வெள்ளி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணியிலிருந்து சான்றிதழ்களை நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் சிரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்து தெரிவிக்கின்றார்.

(க)

## நயினை அம்மன் கும்பாபிஷேகம்

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை ஒட்டி அன்றைய தினம் பாம்பு சுற்றிக்கல், கருடன் கல் ஆகியவற்றை அடியார்கள் தரிசிக்கச் செல்லும் பாதை அமைக்கும் தொடக்க விழாவும் நடைபெறவுள்ளது.

(க—5)

---

## நாளை

**பங்குனி 16**

**வியாழக்கிழமை**

திதி: சதுர்த்தி
காலை 7.34 வரை.
கார்த்திகை விரதம்
நட்சத்திரம்: கார்த்திகை
முன் இரவு 8.32 வரை
சுபநேரம்: 07.43—09 13
சூலகாலம்: 01 43 — 3.13
(பழைய நேரப்படி)

---

### உதயவாக்கு

கர்வம் உடையவர்களைக் கண்டு, வெற்றி விலகி விடுகிறது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையில் 'கலாநிதி' பட்டத்தைப் பெற்றுக்கொண்ட
எமது நண்பன்

**கலாநிதி இராமநாதன் சாந்தன்**
B.A.(Hons), B.Ed, M Phil, (Cey.)

அவர்களை எல்லாவளங்களும் பெற்று மேலும் பலபட்டங்களைப்பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**பல்கலைக்கழக நண்பர்கள்.**

இல. 52/9, கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (85935)



## வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை உப அதிபர்
**கலாநிதி தா. அமிர்தலிங்கம்**
(யா/ அத்தியார் இந்துக் கல்லூரி- நீர்வேலி)

அவர்கள் கல்வியியற்றுறையில் கலாநிதிப் பட்டம் பெற்றதையிட்டு, அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். அவரது கல்விப்பணி மேலும் சிறந்தோங்கி வளர்ச்சியுற வேண்டுமென, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

- மாணவர்கள்.

யா/ அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி. (85941)



## 16 ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி

வதிரி, கிளிவிசிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் கடந்த 52 ஆண்டுகளாகப் பூசகராகக் கடமையாற்றி
அமரராகிவிட்ட
பொலிகண்டியைச் சேர்ந்த
**சிதம்பரம் நடராசா ஐயருக்கு**

எங்களது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

திருமதி தையல்நாயகி கந்தையாவும்
பிள்ளைகள்! இரவிஷங்கர், நிவேதிகா,
நந்திகா ஆகியோரும்
தாயார் சின்னம்மா நமசிவாயம்
அவர்களும்.

''இந்திரகிரி''
இரும்பு மதவடி,
கரவெட்டி. (சி-15910)



## Computer Point
(Training Division)

COMPUTER POINT
TRAINING DIVISION

No 28, St. Patrick's Road,
Jaffna.

## COMPUTER COURSES

- Children Computer Studies (Year 4 To Year 9)
- Beginner's Computer Studies (Special Course For Beginners)
- Advanced Computer Studies
- Dip in Computer Programming & Pc applications
- Certificate Courses

Lectures By:-
S. R. Logendra (D. C. A.)
(Systems Analyst)
(M C. S. — India).

**Short Hand And Typing (English)**

★ சிறார்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புகள் (Year 4 To 9).
★ G. C E. O/L, G. C. E. A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கான, தொழில் புரிவோருக்கான விசேட பயிற்சி நெறிகள்.
★ அனைத்து வகுப்புகளும் வாரநாள்கள், சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.
★ வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு விசேட 50% சலுகைக் கட்டணம் அறவிடப்படும்.
★ உடனடியாக அலுவலகத்தில் விண்ணப் பப்படிவத்தைப் பெற்று தங்கள் அனுமதியை உறுதிப்படுத்தவும்.

விண்ணப்ப முடிவு:- 07-04-2001

(85939) DIRECTOR.


## புத்தாண்டு தின விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் நடத்தும் வருடாந்த புத்தாண்டு தின விளையாட்டு விழா அடுத்த மாதம் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

திறந்த முறையில் நடத்தப்படும் இவ் விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வாக 14 ஆம் திகதி காலை 6 மணிக்கு மரதன் ஓட்டம் நடைபெறவுள்ளது.

(க-ரி)

## ஆலயத்தில் பூஜைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பத்து மாத இடைவெளிக்குப் பின்னர் கைதடி இளிங்கித் தோட்ட கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

கைதடியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் பூட்டப்பட்டிருந்த இந்த ஆலயம் அண்மையில் மக்கள் அங்கு மீளக் குடியமரத் தொடங்கியதை அடுத்துத் திறக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் பிரதம குருக்கள் தலைமையில் தற்பொழுது நண்பகல் நேரப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

(ம-5)

## தென்மராட்சி மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வியில் ஜி. சி. ஈ. உயர்தரப் (2000, 2001) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், தாம் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் பாடசாலையில் இதுவரை செய்து முடித்த செயற்றிட்டங்கள், ஒப்படைகள் ஆகியவற்றின் விவரங்களை உறுதிப்படுத்தி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இயங்கும் மேற்படி பாடசாலையில் சமர்ப்பிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

(க)

★ ★ ★

பளை மத்திய கல்லூரியில் ஜி. சீ. ஈ. உயர்தர கலை, வர்த்தகம், விஞ்ஞானம் 2003 ப் பிரிவில் படிக்க தகுதியுடைய மாணவர்கள், எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் புலோலி றோ. த. க. பாடசாலையில் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

அத்துடன் 2001 க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் ஒப்படை, செய்முறை, செயற்றிட்டப்புள்ளிகளுடன், நாளை வியாழக்கிழமை படிவத்தில் கையொப்பமிட வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(க)

★ ★ ★

தென்மராட்சி, மார்ச் 28

2001 ஓகஸ்டில் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில், தோற்றவுள்ள சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் பரீட்சை விண்ணப்பத்தில் ஒப்பமிடுவதற்காக, தற்போது தற்காலிகமாக இணைந்து கல்வி கற்கும் பாடசாலைகளில் செயற்றிட்ட, ஒப்படைப் புள்ளிகளுடன்—

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு அதிபர் திருமதி சி. சிவநாதன் அறிவித்துள்ளார்.

(க-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**குமரன் கல்வி நிலையம்**
நவாலி

இந்த நிலையத்தில் கல்வி கற்று க பொ. த (சாதாரண தரம்-2000) பரீட்சையில் 95 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இந்த நிலைய இயக்குநர் அவர்களையும், கல்வி புகட்டும் ஆசிரியர் குழாத்தையும், சித்தியடைந்து நிலையத்துக்கும், ஆசிரியர்களுக்கும், எமக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Dr. சுந்தரராஜன் குடும்பத்தினர்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (85933)



## பாராட்டி மகிழ்வெய்துகிறோம்

யா/ யூனியன் கல்லூரி, 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் க. பொ. த (சா/த) பரீட்சையில் தோற்றிய 63 மாணவர்களில் 61 பேர் க. பொ. த. உயர்தரம் கற்பதற்கு சிறப்பான சித்தியடைந்தமையையிட்டுப் பெரு மகிழ்வடைகிறோம்.

சனி, ஞாயிறு விடுமுறைக்காலங்களில் மேலதிக வகுப்புகள் வைத்து, எம் உயர் பெறுபேற்றுக்கு எம்மை நெறிப்படுத்திய எம் ஆசான்களைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம். அவர்கள் சேவையால் எம் கல்லூரி மேலும் வளம் பெற வாழ்த்துகிறோம்.

கணித, விஞ்ஞான பாடங்களிலும் 97% சித்திக்கு உழைத்த ஆசிரியர்களுக்கு விசேடமாக எமது மனமார்ந்த நன்றிகள்.

2000 க. பொ. த. (சா/த)
பரீட்சையில் சித்தியடைந்த
மாணவர்கள்.

யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (85946)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



**திரு. சி. வல்லிபுரம்**
(அதிபர், யா/ சரஸ்வதி மகளிர் வித்தியாலயம், கரவெட்டி)

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வடமராட்சி மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரமும் எமது பாடசாலையின் அதிபருமாகிய திரு. சி. வல்லிபுரம் அவர்கள் அதிபர் தரம் 2-1 இற்கு பதவியுயர்வு பெற்றமை குறித்து அவரின் பணி சிறக்கவும் புகழ் ஓங்கவும் உளமார வாழ்த்துவதில் மகிழ்கின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/ சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்,
கரவெட்டி
(85961)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரிக் குடும்பத்தின்
மாணவன் செல்வன் கு. கஜிதன்
மாணவி செல்வி கு. கஜினா
ஆகியோரது பாசமிகு தந்தையார்

**க. குமாரசாமி**

அவர்கள் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு கல்லூரிக் குடும்பமே கவலையில் ஆழ்ந்துள்ளது. அன்னாரது குடும்பத் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி நிற்கும்
உயர்தரமாணவ மன்றம்,
யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(85945)

## ஆளிப் பலகை எரிந்து நாசம்

# சுன்னாகம் மின் நிலையத்தில் உற்பத்தி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 9.15 மணியளவில் ஏற்பட்ட தீயினால் கட்டுப்பாட்டு அறையிலிருந்த ஆளிப் பலகை எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் அந்த மின் நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த மின் உற்பத்தியை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணாணந்தன் தெரிவித்தார்.

விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பிடப்பட்டு வருகின்றது. இந்த விபத்தால் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர்களுக்கு எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை. எனினும் ஆளிப் பலகைகளைத் திருத்தும் வரைக்கும் அங்கு மின் உற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. திருத்த வேலைகள் எப்போது முடியும் என்று கூறமுடியாமல் இருக்கிறது என்றும் அவர் மேலும் சொன்னார்.

குடாநாட்டுக்குத் தற்போது கிடைத்துவரும் 12 மெகாவோட் மின்சாரத்தில் 3 மெகாவோட் மின்சாரத்தை சுன்னாகம் மின் நிலையமே உற்பத்தி செய்து வந்தது.

தீ விபத்தினால் இந்த மின் உற்பத்தி இடைநிறுத்தப்பட்டதை அடுத்து யாழ்.மாநகர சபைப் பகுதிகளுக்கு இனிமேல் 3 நாள்களுக்கு ஒருமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த மின்வெட்டு இரண்டு நாள்களுக்கு ஒரு தடவையாக மாற்றப்பட்டுள்ளது. எனினும் காலை நேரத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது.

அதேவேளை -

வலி.மேற்குப் பிரதேசம் மற்றும் வலி.தென்மேற்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு ஒன்று விட்டு ஒருநாள் முன்னிரவில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஏனைய இடங்களில் வழமையான மின்விநியோகம் நடைபெறும்.

(ம)

## நெல்லியடிப் பொலீஸ் நிலையப் பகுதியில்

# குற்றச் செயல்களைத் தடுக்க ஊர்காவல் குழுக்கள் அமைப்பு

தென்மராட்சி,மார்ச்28

நெல்லியடிப் பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதையடுத்து அவற்றினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இப்பகுதிகளில் ஐந்து பேர் கொண்ட ஊர்காவற்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக அத்தாய், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி வடக்கு, நெல்லியடி கிழக்கு, நெல்லியடி வடக்கு ஆகிய பகுதிகளில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வி மான்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவது, கசிப்பு உற்பத்தி, திருட்டு, சிறிய தகராறு ஆகிய குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஏ.தகம்பத் தெரிவித்தார்.

விரைவில் ஏனைய பகுதிகளிலும் இக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ம-117)

## புத்தாண்டை முன்னிட்டு

# ஒரே தடவையில் இரு மாத உலர் உணவு வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,மார்ச்28

இடம்பெயர்ந்த மக்களுக்கான மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் ஒரேதடவையில் ஏப்ரல் புத்தாண்டுக்கு முன்னர் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாரத்துடன் மார்ச் மாதம் முடியும் தறுவாயில் உள்ள போதிலும் இன்னமும் நிவாரணம் வழங்குவதற்கான அனுமதிக் கட்டளைகள் கிடைக்காததால் பிரதேச செயலகங்களால் வழங்க முடியவில்லை எனவும் -

ஏப்ரல் மாத நிவாரணம் புத்தாண்டுக்கு முன்னர் வழங்க வேண்டுமாதலால் இரு மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களும் ஒரே தடவையில் வழங்கப்படலாம் எனவும் தெரிய வருகிறது.

(க-117)

# குருநகர் கடலில் உயிராபத்துடன் தொழில் செய்யும் மீனவர்கள்!

## அரை இறாத்தல் பாண்தான் அனுமதி

குருநகர்,மார்ச்28

யாழ்.குடாக் கடலில் குருநகர் இறங்குதுறைக்கும் வெளிச்சக்கட்டைக்கும இடைப்பட்ட கடற்பகுதியில் மீனவர்கள் தற்போது மிகுந்த உயிராபத்துடனேயே நாளாந்தம் தொழில் செய்து வருவதாகக் கூறுகின்றனர்.

காலை 6 மணிக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பிற்பகல் 2 மணிக்கு கரை திரும்புகின்றனர். ஆனால் மீனவர்கள் தமது உணவாக அரை இறாத்தல் பாண் மட்டுமே எடுத்துச் செல்லப் படையினர் அனுமதிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

குருநகர் இறங்குதுறையில் மீனவர்கள் கடலுக்குள் இறங்குவதற்கு முன்னர் படையினரால் கடுமையாகச் சோதனை செய்யப்படுகிறார்கள்.

இதேவேளை -

இப்பகுதிக் கடலில் ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கி வேட்டுக்களும் அடிக்கடி இடம்பெற்றுவருவதனால் கடலில் மீன்பிடிக்கும் போது மிகுந்த உயிராபத்தை மீனவர்கள் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

படையினர் பாஷையூர் பகுதியில இருந்து இப்பகுதிக் கடலை நோக்கி பகலிலும் ஷெல் வீச்சுக்களையும் துப்பாக்கி வேட்டுக்களையும் அடிக்கடி தீர்த்து வருகின்றனர்.

மீன்பிடிக்க விதிக்கப்பட்ட கடல் எல்லை போதாமையினால் மீனவர்கள் அடிக்கடி இந்த எல்லையைத் தாண்டிச் சென்றே மீன் பிடித்து வருகிறார்கள்.

அவ்வேளையில் கல்முனைப் பகுதியில் இருந்தும் மீனவர்களை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலைமைகளினால் நாங்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக இக்கடலில் தொழில் செய்பவர்கள் முறையிடுகின்றனர்.

(க-51)

# அன்பு வாழ்வு வாழ முயல்வோம்

*"உலகுக்குப் புத்துயிர் தர மக்களுக்கு உடன்படிக்கையாய் உன்னை ஏற்படுத்தினோம்"*

**29ஆம் நாள்**

**தவக்காலச் சிந்தனை**

இந்த உலகில் படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டுள்ளார்கள். இறைவனே அனைத்திற்கும் உயிர் அளிப்பவர். இறைவனால் படைக்கப்பட்ட நாம் இறைவனுக்குச் சாட்சியம் கூறும் வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். ஆனால் எம்மில் எத்தனை பேர் இறை வாழ்வைப் பின்பற்றி வாழ முனைகின்றோம்.

இந்த உலக வாழ்வானது இறைவன் எமக்குத் தந்த பரிசாகும். இதனால் நாம் படைப்பில் இறைவனைக் கண்டு மகிமைப்படுத்த வேண்டும். எமது அயலானில் இறைவனைக் காணவேண்டும்.

இவ்வுலக வாழ்வுடன் மறு உலக வாழ்வு ஒன்று உண்டு என்பதை உணர்ந்து இந்த உலகில் அன்பு வாழ்வு வாழ முயல்வோம்.

இந்த உலகில் அன்பு, பொறுமை, பகிர்வு என்னும் புண்ணியங்களைப் பிறருடன் பகிர்ந்து வாழ்ந்து, மறு உலகிற்குத் தேவையான செல்வங்களைச் சேர்ப்போம்.

**லூ.மேசி சுஜந்தினி.**

## மைதானத்தின் மத்தியில் செல்லும் வீதி மூடப்படும்

வலி.தென்மேற்கு,மார்ச்28

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்துக்கு மத்தியில் செல்லும் பிரதான வீதி மூடப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ.அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

(ம-185)

## குடாநாட்டில் வெப்பம் தணிவு

உரும்பிராய்,மார்ச்28

குடாநாட்டில் தற்போது வெப்பநிலை ஓரளவு குறைந்துள்ளது.

கடந்த ஓரிரு தினங்களாக காற்று வீசத் தொடங்கியுள்ளதை அடுத்தே வெப்பம் தணிந்துள்ளது.

(க-154)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தில் புதிய மத்தியஸ்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடைபெறும் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

இத்தெரிவுப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் கிரிக்கெட் ஆர்வலர்கள் விண்ணப்பப்படிவங்களை இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பரீட்சைக் கட்டணமாக 100 ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

இதற்கான விண்ணப்ப முடிவு தினம் ஏப்ரல் 11ஆம் திகதி என்றும்-

சங்கத்தின் செயலாளர் எஸ்.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

(ஐ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்28

இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் வடமாகாணக் கிளையினரால ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'சிறந்த முகாமைத்துவம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மண்டபத்தில் நடைபெறும்.

முகாமைத்துவ கற்கைநெறி வணிக பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் அவர்கள் கருத்துரை வழங்குவார்.

பொறியியலாளர்கள், முகாமையாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(ம)

# வாசகர் திருமுகம்

## புதுயுகம் படைக்க வாரீர்

ஆலய ஒலிபெருக்கிகளின் தொல்லைபற்றி சில மாதங்களுக்கு முன்பு நான் இதே பந்தியில் எழுதியிருந்தேன். இது குறித்து மேலும் இரு வாசகர்கள் எழுதியிருந்தார்கள்.

அதன் பின்னர் இப்பிரச்சினை ஓரளவு கட்டுப்பாட்டுக்கு வந்துள்ளமை திருப்தியளிக்கின்றது. ஆனால் வடமராட்சியில் இதே பிரச்சினையின் இன்னொரு வடிவம் சற்று சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

அதாவது பங்குனி பிறந்து விட்டது. பணச்சடங்குப் பிசாசு தலைவிரித்து தாண்டவமாடத் தொடங்கிவிட்டது.

அதிகாலை "பிள்ளையார் சுழி" என்ற சரணத்தோடு ஆரம்பிக்கும் இப்பணச் சடங்குக் களியாட்டங்கள் மதியம் " நிலவே நீதான் யாருக்கு சொந்தமடி" என்ற பல்லவியோடு தொடர்ச்சியாக இடம்பெற்று பின்பு இரவு "பாரப்பா பழனியப்பா பட்டணமாம் பட்டணம்" என்ற அனுபல்லவியோடு ஒரு முழு நாளை விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

சமூக ஒன்றுகூடலுக்கான சந்தர்ப்பங்கள் என்று சில பழைமைவாதிகள் (CONSERVATIVES) புளித்துப் போன வாதங்களை முன்வைக்கக் கூடும். ஆனால் பல நூறு மக்கள் இடம்பெயர்ந்து ஒரு நேரக் கஞ்சியோடு தங்கள் சீவியப்பாட்டைக் கொண்டிழுத்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் நாங்கள் பெட்டிச் சோறுகளோடும் கட்டுச் சாதங்களோடும் காஞ்சிபுரிப் பட்டுக்களோடும் களியாட்டம் போடுவது மனச்சாட்சியான செயலாகுமா?

மேலும் பாடசாலை நேரங்களில் நாராசமாகப் பாடல்களை ஒலி பரப்புவது நியாயமா?

மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பாது பணம் சம்பாதிக்கும் (MONEY MAKING) களியாட்டங்களில் ஈடுபடுத்துவது நியாயமாகுமா?

நாங்கள் மிலேனியம் நூற்றாண்டில் காலடி பதிக்கத் தொடங்கி விட்டோம். சில புளித்துப்போன பழைய தேவையற்ற பாரம்பரியங்களை விரும்பியோ விரும்பாமலோ எதிர்கால சந்ததியின் நன்மையை முன்னிட்டு நாங்கள் கைவிடத்தான் வேண்டும்.

புதிய நூற்றாண்டில் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற சித்தாந்தத்தைப் பின்பற்றிப் புது மனிதர்களாகவும் புதுயுகம் படைப்பவர்களாகவும் வாழ முயற்சித்துப் பார்ப்போமா? "சிந்தனை தோன்றி அறிவு வளர்ந்தது இன்றல்ல நேற்றல்ல தம்மை திருத்திக்கொள்ளாமல் ஏனோ வாழ்ந்தவர்கள் ஒன்றல்ல இரண்டல்ல".

*வடமராட்சி.* 'யாழ்.வதிரிவாசன்'

## விடுபட்ட நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுப்பார்களா?

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலிருந்து கடந்த மார்ச் 27ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 10ஆம் திகதிவரை இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் தங்கியிருந்த மக்களுக்கு பளைப்பிரதேச செயலகத்தினால் பட்டியல் மூலம் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்க பச்சிலைப்பள்ளி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கல் கட்டளையை வழங்கியிருந்தது. போதிய அறிவித்தல் இல்லாததால் 242 குடும்பங்கள் இந்த நிவாரணத்தை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை.

இடப்பெயர்வினால் நிர்க்கதியாகி உள்ள இந்த 242 குடும்பங்களுக்கும் ஏப்ரல் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக எமது சங்கப் பிரதிநிதிகள் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் பளைப் பிரதேச செயலர், யாழ்.அரச அதிபர், யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் என்று அடுத்தடுத்துப் படியேறிச் சந்தித்து உரையாடினர். எனினும் இந்தக் காலப்பகுதிக்குரிய நிவாரணப் பொருள்கள் வழங்கும் பொறுப்பு பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்தான் என அவர்கள் கூறிவிட்டனர்.

ஆனால் ப.நோ.கூ. சங்கத்தினர் ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்களை வழங்க மறுத்து வருகின்றனர். சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி வறுமையின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ள பளைப் பிரதேச மக்களின் நலனில் அக்கறை கொள்ளவேண்டிய ப.நோ.கூ.சங்க நிர்வாகத்தினர் இந்த நிவாரணப் பொருள்களை வழங்க முன்வராதது வேதனைக்குரியதாகும்.

எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடந்த ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்கள் கிடைக்க வழி செய்வார்களா?

*எழுதுமட்டுவாழ்.* **முகமாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்.**

## கொழும்பு செல்லும் நோயாளரின் துன்பம் தீர வழி செய்வார்களா?

சிகிச்சைக்காக கொழும்பு செல்லவேண்டிய நோயாளர் "பாதுகாப்பு அனுமதி"(கிளியரன்ஸ்) பெறும் விடயத்தில், படும் சிரமங்களையும் வேதனைகளையும் இப்பகுதியில் அடிக்கடி படித்து அறிந்திருப்பீர்கள்.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கொழும்பு செல்லும் நோயாளர்களைப் பொறுப்பேற்றதிலிருந்து 1999ஆம் ஆண்டு கார்த்திகை வரை நோயாளியும், பராமரிப்பாளரும் "பாதுகாப்பு அனுமதி" இல்லாமல் சிகிச்சைக்காகக் கொழும்பு சென்று வந்தார்கள். அப்படி ஒருகாலம் இருந்தது.

பின்னர்,1999ஆம் ஆண்டு மார்கழியிலிருந்து நோயாளியின் பராமரிப்பாளர் "பாதுகாப்பு அனுமதி" பெறவேண்டும் என்ற நடைமுறை பிறப்பிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு ஆனியிலிருந்து இருவரும் அதாவது, நோயாளியும் பராமரிப்பாளரும் இதனைப் பெறவேண்டும் என்ற நிலைமை உருவானது.

ஓரிரு நோயாளர் செய்த தவறுக்காக, இப்போதைய நடைமுறை நூற்றுக்கணக்கான கொழும்பு செல்லவேண்டிய நோயாளர்களை அவஸ்தைப்படுத்துகிறது.

கடந்த, சுமார் ஒரு மாத காலப்பகுதியில் 4 பச்சிளம் குழந்தைகள் அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் அனுப்பப்படவேண்டி இருந்தது. இவர்களின் பராமரிப்பாளர்களான தாய்மார் "பாதுகாப்பு அனுமதி" பெற படாதபாடுகள் படவேண்டிய நிலை. இதனோடு சேர்த்து அநாவசியமான காலதாமதமும் கூட.

எனவே இவ்விடயத்தில் மாற்று ஒழுங்குமுறையோ அல்லது முன்னைய நடைமுறையோ அல்லது விசேட விதிமுறையோ அவசியமாக உருவாக்கப்படவேண்டும் என்பதனைப் பலரும் பல தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

ஆனால், நடைமுறையில் இவ்விடயத்தில் மாற்றமோ முன்னேற்றமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

எனவேதான், இவ்விடயத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ICRC), வரையறையற்ற மருத்துவக் குழு (MSF) போன்ற வைத்தியசாலையோடு நேரடித்தொடர்புடைய பொதுநல அமைப்புக்கள் தலையிட்டு, ஆக்கபூர்வமாக செயற்பட்டால், பல நோயாளர்களின் அநாவசியமான துன்பங்கள் தீரும். பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

இவ்விடயத்தில், மாற்றம் ஏதும் ஏற்பட வழிபிறக்குமா? முன்னேற்றம் ஏற்பட வழிசெய்வார்களா?

*புனித வேளாங்கண்ணி ஆலயம்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

**செ.அன்புராசா**
*(ஆன்மகுரு)*

# மது கல்வி நிறுவனம்

டச்சு வீதி, கோப்பாய்.

**O/L DAY CLASS**

ஆரம்பம் 29.03.2001 — பகல் நேர வகுப்பு காலை 7.00 மணி

வழமையான ஆசிரியர்களின் தனித்துவமான சேவை!
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(C/15934) - நிர்வாகி.


## முதலாம் ஆண்டு நீங்கா நினைவலையில்



மலர்வு 10 - 07 - 1940 உதிர்வு 08 - 04 - 2000

### திருமதி வசந்தாதேவி பரஞ்சோதி

திதி:28-03-2001

எங்கள் இல்லத்தரசியாய் வாழ்ந்து
எமக்கெல்லாம் வழிகாட்டி மறைந்த
உங்கள் அழியா நினைவுகளை
நித்தமும் இங்கு சுமந்து
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

*'சேதுபதி'*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

அன்புக் கணவன்,
பெறாமக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(C/15936)


## பழைய பித்தளை கொள்வனவு

சகல விதமான பழைய பித்தளைப் பொருள்களும் அதி உயர்ந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

**கொள்வனவு விலை கிலோவுக்கு ரூபா 65/-**

எவ்வளவு பித்தளையானாலும் கொள்வனவு செய்யப்படும்.

*விவரங்களுக்கு:--*

**செல்வா ஹாட்வெயர்ஸ்**

120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2873 (C/15909)

மாபெரும் மலிவு விற்பனை

## லைடன் புடைவை நிலையம்

தமிழ், சிங்கள புதுவருடம்
மற்றும்
ஈஸ்டர் பண்டிகைகளை முன்னிட்டு
இன்று 27.03.2001 முதல் 14.04.2001 வரையும் சகல துணி வகைகளுக்கும் விசேட கழிவுகள் வழங்கப்படும் என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

**லைடன் புடைவை நிலையம்**

(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.2381 (C/15929)

## MATHS CENTRE

M.M.V.Road - NELLIADY

A/L - 2003 கலை

ஆரம்பம்:– 28.03.2001 புதன் 3.00 p.m. (ப.நே.)

ECO.
☆ திரு.அன்ரனி
Logic
☆ திரு.பிரபானந்தன்
Hi.Cu.
☆ திரு.ராஜேஸ்கண்ணன்
TAMIL
☆ திரு.அகிலன்
DRAMA
☆ திரு.பிரதீபன்
Po.Sc.
☆ திரு.சந்துரு
GEO.
☆ திரு.கிருஸ்ணராசா

(85840)


## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 27 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(179277ஏ) (179422ஏ) (179422பி)
(179422சி) (179422டி) (183149ஏ)
(183149பி) (183150ஏ) (183150பி)
(183179ஏ) (183495ஏ) (185043ஏ)
(185268ஏ) (186901ஏ) (186944ஏ)
(186944பி) (186960ஏ) (187022ஏ)
(187039ஏ) (187039பி) (187106ஏ)

**சாவகச்சேரி**

(161448ஏ) (161448பி) (161448சி)
(161448டி) (161448ஈ) (161448எவ்)
(161448ஜி) (161449ஏ) (161457ஏ)

**நல்லூர்**

(183310ஏ) (183310பி) (185091ஏ)
(185091பி) (185091சி) (185215ஏ)
(185321பி) (185321சி) (185321டி)
(185352ஏ) (186691ஏ) (186744ஏ)
(186769ஏ) (186971பி) (186994ஏ)
(187000ஏ) (187053சி) (187079ஏ)
(187079பி) (187079டி) (187079வி)
(187085ஏ) (187118ஏ) (187118பி)
(187118சி) (187135ஏ) (188637ஏ)
(188637பி)

**சண்டிலிப்பாய்**

(179446ஏ) (185222ஏ) (185222பி)
(185293ஏ) (186949ஏ) (186949பி)
(186959ஏ) (186959பி) (186959சி)
(186962ஏ) (186980ஏ) (186980பி)
(187041ஏ) (187053ஏ) (187053பி)
(187076ஏ) (187108ஏ) (187108பி)
(187215ஏ) (187215பி)

**தெல்லிப்பழை**

(184843ஏ) (187085பி) (187085சி)
(187167ஏ) (187167பி)

**உடுவில்**

(180321ஏ) (181561ஏ) (181561பி)
(183040ஏ) (183459ஏ) (183459பி)
(183459சி) (183459டி) (185114ஏ)
(186796ஏ) (186796பி) (186796சி)
(186796டி) (186906ஏ) (186918ஏ)
(186955ஏ) (187022பி) (187027ஏ)
(187027பி) (187027சி). (க-10)

## முந்திரிகைப் பழச் செய்கையில் ஆர்வம்

உரும்பிராய்,மார்ச்28

உரும்பிராய்ப் பகுதி விவசாயிகள இப்போது முந்திரிகைப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது பரவலாக முந்திரிகை பயிரிடப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (க-154)


## VACANCIES

MSF; French NGO, Informs that a translation French/English or French/Tamil is needed.

Persons interested, please contact Mr.Christophe Lacoste at MSF office.

**ADDRESS:**
*No.49, AMBALAVANAR ROAD, ATHIYADI, JAFFNA.*
*Tel - 021-2274*

(85940)

புதிய பிரிவு!

**A/L 2003**

(கலை, வர்த்தகம்)
ஆரம்பம்:
31-03-2001
*சனி – காலை 8 மணி*

**D.M.I.**
யாழ்நகர்

(85937)

## ஐடியல் அக்கடமி

சண்டிலிப்பாய்.

O/L DAY CLASS 2001
(பிரிவு I)
ஆரம்பம்:-2001-03-28
*புதன்கிழமை காலை 8.30 மணி*
எமது வழமையான
ஆசிரியர் குழு

(சி15906) - நிர்வாகி

# சதாபொன்ஸ்

அல்வாய்

(O/L DAY CLASS)
க.பொ.த (சா/த) துரித மீட்டல் வகுப்புக்கள்

*ஆரம்பம்:* இன்று (28.03.2001)புதன் காலை 8.00 மணி

அதேவேளை,
**செல்வி ச.அபிராமி 10 D**
**செல்வன் யோ.சிவநுஜன் 9D-C**
ஆகியோரையும் மற்றும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் அதற்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/15935) இயக்குநர்
சதாபொன்ஸ்.


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தப்பு குமாரசாமி

(உரும்பிராய் - வடக்கு)

தேசத்தைத் துறந்து பலர்
சொத்துக்கள் சேர்க்கையிலே
தேசத்தின் தெருவெங்கும்
சொந்தத்தைச் சேர்த்தவன் நீ!
உறவுக்கும் பகைமூட்டி
ஊர் பிரிந்து நிற்கையிலே
உன்னதக் கூட்டுவாழ்வை
மீட்டுவிட உழைத்தவன் நீ!

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், பெற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

I) சரஸ்வதி சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு
II) சிக்கன கடன் வழங்கும் கூ.சங்கம், உரும்பிராய் வடக்கு
III) *சமூக அபிவிருத்தி மன்றம், உரும்பிராய் வடக்கு
IV) இளைஞர் கல்வி மேம்பாட்டுக் குழு, உரும்பிராய் வடக்கு
V) சரஸ்வதி விளையாட்டுக் கழகம், உரும்பிராய் வடக்கு
VI) சரஸ்வதி சுகாதாரக் குழு, உரும்பிராய் வடக்கு
VII) T.R.R.O. கிராம அபிவிருத்தித் திட்டக் குழு, உரும்பிராய் வடக்கு
VIII) நவசக்தி சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு
IX) கலாஜோதி சனசமூக நிலையம், இணுவில் கிழக்கு
X) அறிவொளி சனசமூக நிலையம், குப்பிளான் தெற்கு
XI) வளர்மதி சனசமூக நிலையம், மருதடி, புத்தூர் மேற்கு
XII) யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம்
XIII) சுதேசிய கலாமன்றம், உரும்பிராய்.

(85938)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை இராமுப்பிள்ளை

(கார்க்கார வீரசிங்கம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமுப்பிள்ளை கடந்த (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமுதப்பிள்ளையின் கணவரும், செல்வலட்சுமி (இளைப்பாறிய எழுதுவினைஞர்-கல்வி அமைச்சு), அன்னலட்சுமி (இளைப்பாறிய தாதி-யாழ்.வைத்தியசாலை), கெல்வராஜா (ஓய்வுபெற்ற நில அளவையாளர், கனடா), பாக்கியலட்சுமி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி), மகாலிங்கம் (லண்டன்), பிரேமா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), திலகவதி (கனடா), காலஞ்சென்ற சிவராஜதேவா, ஜெகதீஸ்வரி (லண்டன்), கனகநாயகம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், திலீபன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி), தர்மினி, அபர்ணா (கொழும்பு), அச்சுதன் (லண்டன்), ஆனந்தன், மைதிலி, காலஞ்சென்ற ரிஷிகேசன் (கனடா), அமிர்தநிவாசினி, வக்சினி (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள்), ஜிவகன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த (25-03-2001) ஞாயிறன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுக்கியவளை வீதி,*
*வட்டு. தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
மா.செல்வலட்சுமி
சி.பாக்கியலட்சுமி
(பிள்ளைகள்)

(C/15933)

# நாடகக் கலையை மேலும் வளர்க்க நிறுவனமயப்பட்ட அமைப்புகள் தேவை

**ஈழத்தின் நாடகக் கலைஞர்களில் ஒருவரான கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை 'கலைச்சுடருக்கு' வழங்கிய செவ்வியின் முதல் பகுதி கடந்த வாரம் வெளியாகியிருந்தது. அதன் எஞ்சிய இறுதிப் பகுதி இவ்வார கலைச்சுடரில் இடம் பெறுகிறது.**

*கேள்வி:-* தங்களால் எழுதப்பட்ட நாடகங்கள் மற்றும் வானொலி நாடகங்கள் எத்தனை? அவற்றில் முக்கிய இடம்பெறுபவை எவை?

*பதில்:-* சமூக நாடகங்கள், வானொலி நாடகங்கள் என சுமார் 50 நாடகங்களை எழுதியுள்ளேன். இறுதிப்பரிசு, கூப்பிய கரங்கள், பக்தி வெள்ளம், விதியின் சதி,



'நிறைகுடம்' நாடகத்தில் ஏ.ரி.பி. (கையில் பெட்டகத்துடன்) அருகில் கவிஞர் வி.கந்தவனம்.

முதலாளி தொழிலாளி, இருமனம், பகையும் பாசமும், நிறைகுடம், காதல் கைநட்டம், நாடகம், ஆயிரத்தில் ஒருவர், அண்டல் ஆறுமுகம் (பல்வகை நாடகங்கள்), தாளக் காவடி, இறுதிப்பரிசு, பஞ்ச பூதங்கள், வருடம் பிறந்து முன்னம் முன்னம்... (வானொலி நாடகங்கள்) என்பன எனது கைவண்ணத்தில் உருவானவற்றில் சிலவாகும்.

'விதியின் சதி' என்ற நாடகமே எனது கன்னிப் படைப்பாகும். 1951 ஆம் ஆண்டு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் ஆதரவில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகம் மூலம் குரும்பசிட்டி இளைஞர்களுக்கு நாடக நுணுக்கங்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கல்விகற்ற (1951தொடக்கம் 1955 வரை) காலம் நாடகத்துறையில் நான் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட காலமாகும். கல்லூரியில் 1952ஆம் ஆண்டில் 'முதலாளி தொழிலாளி', 1953ஆம் ஆண்டு 'குவேனி', 1954ஆம் ஆண்டு 'ராகி மைடியர்' ஆகிய நாடகங்கள் என்னால் எழுதப்பட்டு பல்வேறு மொழிகளைப் பேசுபவர்கள் முன் (தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம்) மேடையேற்றப்பட்டது.

இருமனம் ஒத்ததால் திருமணம் நடந்தது. அதாவது எனக்குத் திருமணம் நடந்து ஒரு வாரம் கூடச் செல்லவில்லை. 'இருமனம்' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. 1956 ஆம் ஆண்டு குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் மேடையேற்ற நிகழ்வு இடம்பெற்றது.

நடேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய வேளை கலைத்தொண்டு புரியக் கணிசமான ஆதரவு கிட்டிற்று. 1958 இல் மாணவர்களுடன் இணைந்து 'இரு மனம்' நாடகம் இரண்டு தடவைகள் மேடையேற்றப்பட்டது. நான் எழுதித் தயாரித்து நடித்த நாடகங்களில் நல்ல வரவேற்புப்பெற்ற நாடகம் 'நிறை குடம்' ஆகும். ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நடிக்கத்தக்க வகையில் அதனை அமைத்திருந்தேன். சரித்திர நாடகம் என்ற போர்வையில் நாட்டுப்பற்று, இராஜ விசுவாசம், லஞ்ச ஊழல், நேர்மை, கடமை என்பனவற்றை விமர்சனம் செய்யும் வகையில் இந்த நாடகம் அமைந்திருந்தது. சுமார் 25 மேடைகளில் இந்த நாடகம் மேடையேற்றப் பட்டது. இதன் மூலம் 'நிறைகுடம் பொன்னுத்துரை' என அழைக்கப்பட்டேன்.

மாவை முத்தமிழ்க் கலை மன்றம் ஈழத்துக் கலையுலகில் தனிச்சிறப்புப் பெற்றது. இந்த மன்றத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 'பண்பின் சிகரம்', 'பாசக் குரல்' ஆகிய நாடகங்களை எனது கலை வாழ்வில் மறக்க முடியாதவை. இந்த இரண்டு நாடகங்களும் 9 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டன.

'ஈழநாடு' நிறுவனம் சூறாவளி நிதிக்காக வண்ணை வைத்தீஸ்வ




ராக் கல்லூரியில் 1965 ஆம் ஆண்டு நடத்திய கலை விழாவில் எனது தயாரிப்பினாலான 'செங்கோல் சரிந்தது' என்ற நாடகம் மாவை முத்தமிழ்க் கலை மன்றம் மூலம் மேடையேற்றப்பட்டது.

நான் ஆசிரியராகக் கடமையாற்றிய முதலாவது பாடசாலை காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி. அங்கு 'பணமா பாசமா?', 'சூழ்ச்சியும் வென்றது', 'பாசத்தின் எல்லையிலே', 'தோல்வி', மதவெறி', 'இறுதிப்பரிசு' ஆகிய நாடகங்களில் மாணவர்களை ஈடுபடுத்திப் பயிற்சியளித்துள்ளேன்.

'நாடகம்' என்ற பெயரில் என்னால் உருவாக்கப்பட்ட ஓரங்க நாடகம் கலைக்கழகப் பரிசு பெற்றது.

யாழ்.திறந்த வெளியரங்கு, அருணோதயக் கல்லூரி, கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை முதலிய பல மேடைகளில் இந்த நாடகம் மேடையேறியது. இந்த நாடகத்தில் பயந்தாங்கொள்ளிகளாக நானும், கவிஞர் வி.கந்தவனும் நடித்துள்ளோம்.

**செவ்வி : ஆனந்தன்**

எனது படைப்புக்களில் வானொலி நாடகங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர், 1960 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'வானொலிக் கலைவிழாவை' நடத்தியபோது 'காதல் கைநட்டம்' என்ற நகைச்சுவை நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றினேன். 1962 இல் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற வானொலிக் கலைவிழாவில் எனது தயாரிப்பான 'வருடம் பிறந்து முன்னம், முன்னம் ....' என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டது. ஈழத்தின் நாடகத்தை கலையரசு கே.சொர்ணலிங்கம், நகைச்சுவை மன்னன் கே.செல்வரத்தினம், கே. என்.நவரத்தினம், வசந்தா அப்பாத்துரை ஆகியோர் இந்த நாடகத்தில் என்னுடன் இணைந்து நடித்தனர்.

'பஞ்சபூதங்கள்', 'தாளக் காவடி' ஆகிய வானொலி நாடகங்களும் எனது படைப்புக்களில் முக்கிய இடம்பெறுகின்றன. இவற்றில் 'தாளக் காவடி' 1973ஆம் ஆண்டு நவம் பர் மாதம் ஒலிபரப்பப்பட்டு எனக்குப் பெரும்புகழை ஈட்டித்தந்தது.

*கேள்வி:-* யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்குகளில் முன்னாளில் பெயர்பெற்று விளங்கிய 'தாளக் காவடி' என்னும் கிராமியக் கலைபற்றிக் கூறுவீர்களா?

*பதில்:-* ஒரு நடிகனுக்கு நல்ல உடல் நலம் இருக்கவேண்டும். அங்க அசைவுகளும் லயஞானமும் முக்கியமாகக் காணப்படவேண்டும். தாளக காவடி இவற்றுக்கு நல்ல பயிற்சியைக் கொடுக்கிறது.

1924 ஆம் ஆண்டு அண்ணாவி கந்தப்பிள்ளை, 'பொற்கொடியாள்' ஆட்டக்கூத்தைக் குரும்பசிட்டியில் 6 இரவுகள் தொடர்ச்சியாகப் பயிற்றுவித்து அரங்கேற்றினார். ஆறு இரவுகள் தொடர்ச்சியாக ஆடி நடிக்குமளவுக்கு உடற்பயிற்சியைத் தாளக காவடி மூலமே அவர் வழங்கியிருந்தார். இக்கூத்தில் நடித்தவர்களின் ஆட்ட நகர்வுகள், முண்ட நடிப்புக்கள் அனைத்துக்கும் தாளக் காவடிப் பிரயோகங்கள் பெரிதும் உதவியிருக்கின்றன.

நாடகங்களைப் பொறுத்தவரை, தாளக்காவடி மெட்டுகள், தாளக்கட்டுகள் பல நாடகங்களிலும் பிரயோகிக்கப்பட்டு இருக்கின்றன. நாடக அரங்கக் கல்லூரி மூலமாக தாசீசியஸ் அவர்கள் தயாரித்த 'கந்தன் கருணை' நாடகம் ஆலயப் பிரவேசத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இங்கு ஆலயப் பிரவேசத்தில் ஈடுபடும் பக்தர்கள், 'தாளக் காவடி' ஆட்டமுறையில் ஆடிப்பிரவேசிக்க, அவர்களைத் தடுக்கும் குண்டர்கள் 'கதகளி' முறையில் தடுப்பதாக அமைத்திருந்தார். இது ரசனை மிக்கதாய் அமைந்தது.



'தாளக்காவடி' நாடகத்தில் ஒரு காட்சி
கூப்பிய கரங்களுடன் ஏ.ரி.பி.

*கேள்வி:-* குடாநாட்டில் நாடகக் கலைஞர்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் பற்றியும், நாடகத் துறையை மேம்படுத்தி எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றியும் கூறுவீர்களா?

*பதில்:-* கலைஞர்களுக்கு குறிப்பாக நாடகக் கலைஞர்ளுக்கு மதிப்பு அளிக்கும் பண்பு குடாநாட்டில் மறைந்து செல்கின்றதென்றே கூற வேண்டும். இதற்குத் தொடரும் இடம்பெயர்வுகளும், நிம்மதியற்ற, வாழ்வுமே காரணமாகும். வயது முதிர்ந்த நாடகக் கலைஞர்கள் பலரும் கவனிபாரற்ற நிலையில் முடங்கிக் கிடக்கின்றனர். இத்தகைய கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நாடகமன்றங்களும், சமூக அமைப்புக்களும் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும்.

ஆலயங்கள் நாடகக் கலையை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். தமக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை திருவிழாக்காலங்களில் நாடகங்களை மேடையேற்றுவதற்கென செலவு செய்ய முன்வரவேண்டும்.

நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்கள் அந்தப்பாடத்தைப் பரீட்சையை மையமாகக் கொண்டு கற்காமல் தமது வாழ்க்கையின் ஓர் அங்கமாக - தமிழர்களின் வாழ்வியல் அம்சமாக - தமிழர் பண்பாட்டின் ஓர் அங்கமாகக் கொண்டு வாழ்க்கையை நாடகத்துக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

இளம் நாடகக் கலைஞர்கள் நாடகம் பற்றி இதுவரை வெளிவந்த நூல்களைத் தேடிப் பெற்று வாசிக்க வேண்டும். அத்துடன் எங்கெல்லாம் நாடகங்கள் மேடையேறுகின்றனவோ



ஏ.ரி.பொன்னுத்துரை

அங்கெல்லாம் சென்று நாடகங்களைப் பார்க்கவேண்டும் - ரசிக்க வேண்டும். நிதி வளம் படைத்தவர்கள் நாடகங்கள் மேடையேற்றுவதற்கு நிதி வழங்கவேண்டும்.

நாடகங்களை மேடையேற்ற நிதி வழங்கவேண்டும்.

நாடகக் கலையை வளர்க்க, நாடகங்களை மேடையேற்ற நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புக்கள் உருவாக்கப்படவேண்டும். அவை தமது செயற்பாடுகளை பல்வேறு வகையிலும் விரிவு படுத்த வேண்டும்.

★

# 'சாம்ராட் அசோகன்' நாடக மேடையேற்றம்: காலத்தின் தேவையறிந்த முயற்சி

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரத நாட்டிலே எட்டுத்திக்கும் வெற்றிக்கொடி நாட்டி இமயம் முதல் குமரி வரை அரசோச்சியவன் மாவீரன் அசோகன். போர் வெறியும் ஆதிக்க உணர்வும் மேலிட்டு அவற்றால் ஆளப்பட்டு ஆயிரம் ஆயிரம் உயிர்களைக் கொன்றொழித்து அவர்களின் உடலங்களை படிக்கற்களாக்கி உயர்ந்து உலகத்தின் பார்வையைத் தன்பக்கம் திரும்ப வைத்தவன் அசோகன். ராஜதந்திரி சாணக்கியரின் சாமர்த்திய மூளையின் வேகத்தால் விவேகமின்றிச் செயற்பட்டு வீண் பழி சுமந்த அசோகனை விழிப்புறச் செய்தது கலிங்க யுத்தம்.

இமயத்தின் உச்சியிலே புலிக்கொடி நாட்டிய சோழர்களைப் பழிவாங்கத்துடித்த மௌரியர்களை பெல்லாம் தோல்வியுறச் செய்து மங்காப்புகழ் கொண்டு விளங்கிய புனித பூமி கலிங்கத்தில் தடம் பதித்து புத்துயிர் பெற்று, போதி மரத்து மாதவனின் போதனைகளால் திசைமாறி போர்க்களத்து இரத்த ஆற்று நீரிலும், கரைந்தோடிய கலிங்க மக்களின் கண்ணீராலும் கழுவப்பட்டு களங்கமற்றவனாக மாறியவன் அசோகன்.

இத்தகைய அசோகனின் வாழ்க்கைச் சரிதையிலே வரலாற்றுப் பாடங்களாக அமையும் சிலவற்றை மட்டும் தேர்ந்து சேர்த்து - கோர்த்து - கருவாக்கி நவீன நாடகப் பாணியிலே இணுவில் அம்பலவாணர் கலை அரங்கத்தினர் அண்மையில் மேடையேற்றினார்கள். பார்ப்பவர் கண்களை வெட்டாமல் விழிக்க வைத்து நோக்க வைத்த பெருமை நாடக எழுத்தாளர், நடிகர்கள், இயக்குநர் எல்லோரையும் சாரும். நாடகக்கதையினை எழுதியவர் பிரபல ஈழத்து எழுத்தாளர் கே.எஸ். ஆனந்தன் அவர்கள். நாடகத்தை இயக்கியவர் நாடகக் கலைஞர் பொன். சர்வேஸ்வரன் அவர்கள்.

'சாம்ராட் அசோகன்' என்னும் இச்சரித்திர நாடகம் காலத்தின் தேவையறிந்து மேடையேற்றப்பட்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். காலத்தின் கோலமும், சீர்கெட்ட வாழ்க்கையும், திசைமாறிய உறவுகளும், சிதைந்திட்ட உணர்வுகளும், இன்று சேர்ந்தெம்மை வருத்தக் காரணம் என்ன என்பதை, கதையின் கருவை ஊகித்து அறிய முடியும்.

இறுதிக்காட்சியிலே காவியுடை தரித்த பௌத்தபிக்கு ஒருவர் அறவழி தவறி, அறியாமை இருளிலே மூழ்கி, நெறி பிறழ்ந்து, திகைத்து நின்ற அசோகனை நெறிப்படுத்த கூறும்போதனைகள், இன்று எம் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் பிக்குகளிற்கு போதிக்கப்படவேண்டியவை.

"அன்பு தான் இன்பம்
அன்பு தான் உலக ஜோதி
அன்பு தான் உலக மகா சக்தி"

என்னும் அருமருந்தான நற்போதனைகள் நிலையற்று - பொருளற்று- போய்விட்டனவே இம்மண்ணில் என எண்ணும் போது மனம் ஒரு தரம் ஏங்குகின்றது. இந்த முத்தான மூன்று வார்த்தைகளையும் கேட்டே திருந்திய அசோகனின் பரம்பரை மதத்தினர் ஏன் மதம் கொண்டனர் இம்மண்ணில்?

போரிலே சாவடைந்த தன் வீர மகனின் உடலை ஏந்தியழும் தாயின் ஈனக் குரல் அசோகனை நிலைகுலையவைத்து நேர் வழி காட்டியதே.. ஏன்? ஆயிரமாயிரம் அபலைகளின் அழுகுரல், கண்ணீர் இவர்களை திருத்த முடியாது சக்தியற்றுப் போனதுவே ஏன்?

இரும்பு மனதையே கரும்பாகக் கனிய வைத்த போதிமரத்து புனிதனின் போதனைகள் ஏன் இங்கு மௌனங்களாகப் புதைக்கப்பட்டன? இம்மண்ணிலே புத்தரின் அறிவுரைகள் சிறைப்படவேண்டிய வேளையிலே ஏன் புதைகுழிகள் சிறைப்படுகின்றன? அகில உலகத்தையுமே ஆளும் வல்லமை படைத்த மாமன்னன் அசோகனையே மாற்றிய பொன்மொழிகள் ஏன் பேச்சற்றுப் போய் விட்டன? என எத்தனையோ எண்ண அலைகளை எழுப்பிய 'சாம்ராட் அசோகன்' சரித்திர நாடகக் கலைஞர்கள் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

இறுதியிலே அவர்களிடம் ஒரு விண்ணப்பம், மூலை முடுக்கெல்லாம் இந்நாடகம் மேடை யேற்றப்பட்டு ஒளிந்துள்ள உட்கருத்துக்கள் உலகறியச் செய்யப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை எடுத்து முன்னேற எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைப்பதாக!

★

# MATHS CENTRE

**M.M.V.Road - Nelliady**

## O/L DAY CLASS

**ஆரம்பம்:- 30-03-2001 வெள்ளி** 6.30 a.m. (ப.நே)

- மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.
- அனுபவமிக்க வடமராட்சி, தென்மராட்சி ஆசிரியர் குழு.
- அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (85841)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நயினை மண்ணில் மலர்வு 04 - 04 - 1934



நயினை அன்னை அடியில் 07 - 04 - 2000

## திருமதி அன்னபூரணி கனகசபை

திதி:-28.03.2001

*ஆண்டொன்று ஆனதம்மா*
*எம்துயரம் ஆறவில்லை!*
*அன்பான அம்மாவே எங்குதான்*
*சென்றுவிட்டீர்?*
*எம்மை விட்டு அகலாத எங்கள்*
*இனிய அம்மா!*
*எமக்கு அமுதமிட்ட*
*உமது கரம் ஓய்ந்ததுவோ?*
*ஏங்கித்தவிக்கின்றோம்*
*உத்தமியே உன்பிரிவால்!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

*"சத்திய வார்த்தினி"*
*முதலாம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

(85897)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனி, பெறாமக்கள்.

## பிரதேச மலர் வெளியீடு

வலிகாமம் வடக்கு பிரதேச மலர் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலாளரும் மேலதிக அரசாங்க அதிபருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மலரின் அறிமுக உரையை சைவப்புலவர் க.செல்லத்துரையும் ஆசியுரையை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சி.விநாசித்தம்பி ஆகியோரும் வாழ்த்துரையை யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும் வெளியீட்டு உரையை உயர் பட்டப் பீடாதிபதி பேராசியர் அ.சண்முகதாசும் மதிப்புரையை கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா, பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் ஆகியோரும் பதிலுரையை திருமதி ப.திலகநாயகம்போலும் ஆற்றவுள்ளனர்.

(3-86)

## நீர் முகாமைத்துவப் பயிற்சி

இலங்கை விவசாயிகளுக்கு நீர் முகாமைத்துவம் தொடர்பாகப் பயிற்சிகளை வழங்க உலக உணவு விவசாய அமைப்பின்(எவ்.ஏ.ஓ) அதிகாரிகள் தற்போது இலங்கை வந்துள்ளனர். இலங்கை விவசாய, நீர்ப்பாசன அமைச்சுக்களின் அனுசரணையுடனும் ஐ.நா.சபையின் உணவு, விவசாய அமைப்பின் ஆதரவுடனும் இத்திட்டம் இலங்கையில் மேற்கொள்ளப்படுகிறது.


# CHEMISTRY

பிரத்தியேகப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- ★ Physical chemistry
- ★ Inorganic chemistry
- ★ துரித மீட்டல் வினா விடை
- ★ Basic chemistry

**CHEMISTRY**

**திரு. அன்பு**

தொடர்பு:-
26, Cathedral Rd.
யாழ்ப்பாணம்

(85914)


# 31ஆம் நாள் ஞாபக அலைகள்

கன்னியாகி மண்ணிலே 1966-12-26



பலியாகி விண்ணிலே 2001-02-26

## திருமதி சித்திரா(கலா)மகாலிங்கம்

**கனவையும் மறந்திடலாம் நனவையும் மறந்திடலாம்**
**இன்றைக்கு எண்ணியதை நாளைக்கும் மறந்திடலாம்**
**ஆனாலும் உன் நினைவு ஆழமாய் எங்களிலே**
**வாழ்நாள்எல் லாம்சிறப்பாய்ப் பதித்து வேர்விட்டதனால்**
**உன்னைநாம் மறக்கமாட்டோம் உத்தமி சித்திராவே!**
**எம்மைநீ வந்து பார்க்கும் நாளைத்தான் எதிர்பார்க்கிறோம்!**

இன்று (2001-03-28) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். சிவபதமடைந்த சித்திராவின் இறுதிக்கிரியையிலும், அந்தியேட்டி வைபவத்திலும் கலந்து சகல வித உதவிகளையும் செய்து தந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(85908)

**கணவர், பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

# ஆழ்ந்த நன்றிகள் - THANKS

எமது ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம மாணவன்

## செல்வன் மு.சுந்தர்ராஜ்

**புகையிரதப்பாதையைக் கடக்கும்போது 19.03.2001 திங்கட்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.**

இவரது பெற்றோர்கள், சகோதரர்கள் துடியாய்த் துடித்தார்கள். இவர்கள் யாவரும் உடனடியாக கொழும்பில் நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள உதவிய அன்பு நெஞ்சங்களை நாம் என்றும் மறவோம்.

- ✦ செல்வம்
- ✦ பருத்தித்துறை CIVIL AFFAIRS பொறுப்பதிகாரி
- ✦ RRAN உயர் அதிகாரி
- ✦ அன்புக்குரிய அரசாங்க அதிபர்
- ✦ அன்புக்குரிய மேலதிக அரசாங்க அதிபர்
- ✦ யாழ்ப்பாணத்தில் உள்ள CIVIL AFFAIRS சகல உயர் அதிகாரிகள் திரு. Robinson உட்பட
- ✦ திரு.க.விக்னேஸ்வரமூர்த்தி

இவர்கள் அனைவருக்கும்
தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் சார்பில்
நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முக்கிய குறிப்பு: *கொழும்பில் பல உதவிகள் செய்த அனைவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.*

**ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,**
*பருத்தித்துறை.*

(C/15928)

அன்னையின் அடியவன
சுவாமி சித்ரூபானந்தா.

# நாலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 - 07 - 1936



விண்ணில் 11 - 04 - 1997

## திருமதி செல்லம் கணபதிப்பிள்ளை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"செல்வபதி",*
*கைதடி கிழக்கு,*
*கைதடி.*

(85828)

பிரிவால் துயருறும்:
K.S.கணபதிப்பிள்ளை
(கணவர்)
தாயார், மகள், மருமகன்,
பேரன், உற்றார், உறவினர்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மலர்வு 1904 - 11 - 16



மறைவு 2001 - 02 - 26

## திருமதி பொன்னம்மா முருகுப்பிள்ளை

எமது நிலையக் காப்பாளர்களில் ஒருவராக இருந்து அருஞ்சேவையாற்றிவரும் திருமதி திலகவதி வைரவநாதன அவர்களின் அன்புத் தாயார் திருமதி பொன்னம்மா முருகுப்பிள்ளை அவர்களின் ஆத்மசாந்திக்காக மாவந்திதனி விநாயகர் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*பருத்தித்துறை*

(85896)

**மேலைப் புலோலி**
**சதாவதானி கதிரைவேற்பிள்ளை**
**சனசமூக நிலையத்தினர்**

## அழிவில் இருந்து நாட்டைக்காக்க முன்வாருங்கள்

# புலிகளின் யுத்தநிறுத்தத்தை சகலரும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்

## இந்து சமயப் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்28

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை சகல மதத் தலைவர்களும் அரசியல் கட்சியினரும் குறிப்பாக இலங்கை அரசாங்கமும சரியான முறையில் பயன்படுத்தி நாட்டை அழிவில் இருந்து காப்பாற்ற முன்வரவேண்டும்.

இந்து சமயப் பேரவை மேற்கண்டவாறு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தக்க முறையில் பயன்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினரின் நன்மதிப்பையும், கௌரவத்தையும் பெறமுடியும். இந்தநாடு மாபெரும் சோதனையைச் சந்தித்துக்கொண்டிருக்கும் இந்தவேளையில் நிதானமாகச் செயற்படும் பெரும் பொறுப்பு சகல தரப்பினருக்கும் உண்டு என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்துகின்றோம்.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பைத் தக்க முறையில் பயன்படுத்தவேண்டும் என இலங்கை அரசுக்கு மதத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் ஆலோசனை வழங்கவேண்டியது காலத்தின் தேவை. இதனை உணர்ந்து சமாதானப் பாதையில் முன்னேற அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

நீண்ட பெரும் பாரம்பரியத் தொடர்புபடைத்த இந்து, பௌத்த மக்களுக்கிடையேயுள்ள புரிந்துணர்வை வலுவடையச் செய்வதன் மூலம் பகைமையுணர்வை நீக்கிவிடலாம் என்றே நாம் எண்ணுகின்றோம்.

போர் மூலம் ஒருபோதும் இந்த நாட்டில் எவராலும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதைக் கடந்த கால அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆகையால் பேச்சு மூலம் சமாதானத்தை நிலைநாட்ட முன்வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(ம-3)



சமாதானத்தை வலியுறுத்தும் மடுமாதா திருச்சொரூப பவனி தெற்கில் இடம்பெற்றுவருகிறது. கடந்த வாரம் இந்தப் பேரணி கல்கிசைப் பகுதியை வந்தடைந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு பதிவாளர், கணக்காளர் இல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு பதிவாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் நியமனம் செய்யப்படாத காரணத்தால் நிர்வாகச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்பு பதிவாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்ட போதும் அவர் ஏற்கனவே கடமையாற்றுகின்ற அலுவலகத்திலிருந்து முறையாகப் பதவியை விட்டு விலகாத காரணத்தினால் இதுவரையும் அவர் தனது கடமையைப் பொறுப்பேற்கவில்லை என்று கூறப்படுகிறது.

கணக்காளர் நியமனம் பற்றி எந்தவிதமான முடிவும் இதுவரை கிடைக்கவில்லை என தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-10)

# அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற 9இலங்கையர் உட்பட 240பேர் கைது!

கொழும்பு,மார்ச்28

கௌத்தமாலா ஊடாகச் சட்டவிரோதமாக அமெரிக்கா செல்ல முயன்ற ஒன்பது இலங்கையர்கள் உட்பட 240 பேர் சர்வதேச கடற்பரப்பில் வைத்து அமெரிக்கக் கரையோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் ஏனையோர் ஈக்குவடோர் நாட்டவர்கள். இவர்கள் அனைவரும் தற்போது கௌத்தமாலாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

வார இறுதியில் இவர்கள் மீன்பிடிப்படகு ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும், நீண்ட நாள்களாக இவர்கள் உணவு அருந்தாததால் சுகயீனமுற்றிருப்பதாகவும் கௌத்தமாலா நாட்டு குடிவரவுத் துறைப் பேச்சாளர் ராமன் வொனிலா கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களில் 183 ஆண்களும், 49 பெண்களும், 8குழந்தைகளும் அடங்குவர். இலங்கை மற்றும் ஈக்குவடோர் நாட்டு இராஜதந்திரிகள் வந்து இவர்களை அழைத்துச்செல்லும்வரை தமது அரசு காத்திருப்பதாக குடிவரவுப் பேச்சாளர் வொனிலா மேலும் தெரிவித்தார்.

(ஐ)



சமாதானத்தை வலியுறுத்தி யாழ்.வை.எம்.சி.ஏயினரால் நடத்தப்பட்ட சுவரொட்டி ஓவியப் போட்டியில் முதலிடம் பெற்ற உடுவில் வி.ப. சசிவர்ணனுக்கு பரிசினையும் சான்றிதழையும் வழங்குகின்றார் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த திருமதி ஜெனோவா அல்பிரட். யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகச் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஏ.ஜே. பேர்ணாட் கலந்துகொண்டார். (ஜ-152)

# இந்திய கிரிக்கெட் அணியுடன் இனி விளையாடுவதில்லை!

## பாகிஸ்தான் தரப்பில் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,மார்ச்28

இந்திய அணியுடன் இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் பாகிஸ்தான் அணி கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றமாட்டாதென்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜெனரல் தாஹீர் ஷியா தெரிவித்துள்ளார்.

சார்ஜாவில் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகும் மூன்று நாடுகளுக்கிடையிலான சர்வதேச ஒரு-நாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு இந்திய அணி மறுப்புத் தெரிவித்ததையடுத்தே, இனிமேல் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியாவுடன் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றப் போவதில்லையென பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் இலங்கை, இந்திய, பாகிஸ்தான் அணிகள் பங்கு பற்றுவதாகவிருந்தது. எல்லைப் பிரச்சினை உச்சகட்டத்தை அடைந்தது. அத்துடன் பாகிஸ்தான் பங்கேற்கும் எந்தப் போட்டிகளிலும் இந்தியா பங்கேற்காது என்றும் இந்திய அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பை உடனடியாக அமுல்படுத்தும் வகையில் கனடாவில் நடைபெறவிருந்த 'சஹாரா' கிண்ணப் போட்டியிலும் இந்திய அணி பங்குபற்றவில்லை.

இதன் பின்னர் கடந்த ஆண்டு பிற்பகுதியில் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளவும் இந்திய அணிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை. இதையடுத்தே இந்தியாவுடன் இனி எந்தக் கிரிக்கெட் போட்டிகளிலும் பங்குபற்றப் போவதில்லை என பாகிஸ்தான் அணி அறிவித்துள்ளது.

'போதும் போதும் இனிமேல் இந்திய அணியை எம்முடன் விளையாடுமாறு வற்புறுத்தப்போவதில்லை. நாம் விரும்பியதெல்லாம் கிரிக்கெட் விளையாடமட்டுமே என்றாலும் நாம் *நிச்சயமாக எமது அணியை சார்ஜா*வுக்கு அனுப்புவோம்' எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலடியாக. அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) சுற்றுப் போட்டிகளில் நாம் பங்குபற்றப்போவதில்லை. இது தொடர்பாக எமது அரசின் ஆலோசனையையும் பெறவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

தற்போது ஆசியக் கிரிக்கெட் சபையின் தலைவராக இருக்கும் லெப். ஜெனரல் ஷியா, சார்ஜாவில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு தான் தலைமை வகிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# அவிசாவளை நீதிவானை நோக்கி கிரனேட்டுடன் பாய்ந்த கைதி

கொழும்பு,மார்ச்28

அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அங்கிருந்த கைதி ஒருவர் கைக்குண்டுடன் நீதிவானை நோக்கிப் பாய்ந்து சென்ற போது பொலீஸாராலும் சிறைக்காவலர்களாலும் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஜகத் பொன்சேகா என்ற கைதியே இவ்வாறு கைக்குண்டுடன் பாய முயற்சித்துள்ளார்.

இவர் மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவர் மீதான வழக்கு விசாரணைக்காக சிறைக்காவலர்களால் அவிசாவளை நீதிமன்றுக்கு கொண்டுவரப்பட்டிருந்தார்.

நீதிமன்ற விசாரணை ஆரம்பமான வேளை இவர் தன்னிடம் மறைத்து வைத்திருந்த கைக்குண்டொன்றுடன் நீதிவானை (பெண்) நோக்கிப் பாய்ந்து ஓடி குண்டை வெடிக்கவைக்கப் போவதாக சத்தமிட்டு அச்சுறுத்தினார்.

எனினும் அங்கு கடமையில் இருந்த பொலீஸாரும் சிறைக்காவலர்களும் தந்திரமான முறையில் செயற்பட்டு அக்கைதியை மடக்கிப் பிடித்தனர்.

இதனால் அவிசாவளை நீதிமன்றமும், அதன் சுற்றுப்புறமும் அல்லோலகல்லோலப்பட்டது.

வழக்கு விசாரணைகளும் நடைபெறாமல் நீதிமன்றமும் கலைந்தது.

கைககுண்டு இக்கைதிக்கு எப்படிக கிடைத்தது என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன.

(ஐ)



வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பாடசாலையில் பல ஓவியங்களை வரைந்து தந்த யாழ்.கல்வி வலய கவின் கலை ஆசிரிய ஆலோசகர் ஓவியமணி செ.வரதராஜன் மேற்படி பாடசாலையில் வைத்து அண்மையில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். யாழ். பல்கலைக்கழக விவசாயப் பீடாதிபதி சு.இராசதுரை அவருக்கு பொன்னாடை போர்த்துவதை படத்தில் காணலாம். (ஐ-133)

# அழிக்கப்பட்ட புத்தர் சிலைகளின் சிதைவுகளை மீளப்பெற முயற்சி

## அமைச்சர் ஜயரட்ண பாகிஸ்தானிடம் கோரிக்கை

கொழும்பு,மார்ச்28

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்களினால் அழிக்கப்பட்ட புத்தர் சிலைகளின் சிதைவுகளை இலங்கைக்கு பெற்றுத்தருமாறு விவசாய அமைச்சர் டி.எம்.ஜயரட்ண இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அழிக்கப்பட்ட புத்தர் சிலைகளின் சிதைவுகள் கிடைக்கப்பெறுமேயானால் அவற்றை கம்பளையில் உள்ள பாரம்பரிய கலைப் பொக்கிஷங்கள் பேணும் கூடத்தில் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

இதற்கு இணக்கம் தெரிவித்தால் சிதைவுகளை அங்கிருந்து கொண்டுவருவதற்கு குழு ஒன்றை ஏற்பாடு செய்வதாகவும் அமைச்சர் பாகிஸ்தான் தூதரகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க)

## நடமாடும் செயலக சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்28

வேலணை பிரதேச செயலர் பிரிவின் நடமாடும் செயலக சேவை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை புங்குடுதீவு பிரதேச சபை உபஅலுவலகத்தில் நடைபெறவுள்ளது.(ம-5)

# யாழ்.ஆஸ்பத்திரியில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## சுகாதார அமைச்சர் உறுதிமொழி

கொழும்பு,மார்ச்28

யாழ்.ஆஸ்பத்திரியிலுள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்குமென சுகாதார அமைச்சர் ஜோன் செனவிரத்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உறுதியளித்தார்.

சுகாதார, சுதேச வைத்திய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் யாழ்.மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. மகேஸ்வரன் பேசும்போது, யாழ். ஆஸ்பத்திரியில் சிற்றூழியர், சாரதிகள், மேசன்மார், தொழில்நுட்பவியலாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகச் சுட்டிக்காட்டினார்.

இந்த வேளையில் குறுக்கிட்ட சுகாதார அமைச்சர் ஜோன் செனிவிரத்ன உடனடியாக மேற் கண்ட வெற்றிடங்கள் நிரப்பப்படுமென உறுதியளித்தார்.

(ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வோஷிங் மெசின் ஜெனரல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 28, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (பார்வையிடும் நேரம் தினமும் 12.00-3.00வரை) (85932)

சிறிது காலம் பாவித்த வாட்டர் பம் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 99, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (**SRIRAM** இற்குப் பக்கத்தில்) (85948)

## சிறுகதை

க.பொ.த. மாணவர்களே! சிறுகதை படிக்கிறீர்களா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'இலக்கியக் கட்டுரைகள்' நூலை வாசியுங்கள். சிறுகதை பற்றிய கட்டுரையுடன் 12 சிறுகதைகளுக்கு விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. 'யாழ்ப்பாணம்' சிறுகதைத் தொகுதியையும் வாசியுங்கள். (85888)

## •கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- 609, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம், வி.குணபாகன், 343, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **T.P.: 3353** (85957)

## தவறிவிட்டது

இல.24, மத்திய மேற்கு வீதி, குருநகரைச் சேர்ந்த அன்ரனி அனிஸரன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0901027875) 10-03-2001 சனிக்கிழமை குருநகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.(C/15937)

ஞானசம்பந்தர் வீதி, வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை **[J/166]** எனும் முகவரியைச் சேர்ந்த ஸ்கந்தராசா சயந்தன் என்பவரது தேசிய அ. அட்டை (781250139**V**), விசேட அ. அட்டை (090401955 பச்சை உறையுடன் மட்டும்) என்பன 24.03.2001 அன்று வட்டுக்கோட்டைக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியிலோ அல்லது செல்வராசா, சாமுவேல் அன் சன்ஸ் கொம்பனி, 208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ ஒப்படைத்துதவவும் சன்மானம் ரூபா 4000 வழங்கப்படும். (85864)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர்,கல்பேட்ஸ்,சேவல் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தியடி, நல்லூர். (85944)

## பொருளியல்

வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம் 2000 **A/L** வினா விடை மற்றும் நூல்கள், யாழ் நகரம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய இடங்களில் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே. கருணாகரன். (85862)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர், கல்பேட்ஸ், தேவை தொடர்பு:- தனபால சிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தியடி, நல்லூர். (85944)

## ஆங்கிலம் விசேடமாக

O/L இல DISTINCTION, CREDIT பெறுபேறடையவும் A/L, G.A.Q, ஆண்டு 6-10 வகுப்புகளுககும் கற்பிக்கப்படும். ஆசிரியர்:- B.Sc. (cey)Lond Inter தொடர்பு:- 85, சிவன்கோயிலடி (சிவன்கோயில் பின்புறமாக), திருநெல்வேலி. (85690)

## இருவர் படுகாயம்

தென்மராட்சி,மார்ச்28

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையில் மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-117)

**மொடேன் கல்வி நிலையம்**
நெல்லியடி.

**O/L DAY CLASS**

28.03.2001 (புதன்)
எமது வழமையான ஆசிரியர் குழுவினால் இன்று ஆரம்பமாகிறது. (85962)

# குறுகியகால விவசாயப் பயிற்சிகள் அடுத்த மாதம் இங்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.மாவட்ட விவசாயிகளின் தேவைகளை மையமாகக் கொண்டு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் குறுகியகால விவசாயப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள இந்தப் பயிற்சி நெறிகளில் கூட்டெரு தயாரித்தல், தாவர சேர்க்கைப் பீடை நாசினிகளின் பாவனை, ஒருங்கிணைந்த விவசாயச் செய்கை மற்றும் வெற்றிலைச் செய்கை ஆகியன பற்றிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மாதத்தின் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு பயிற்சி வீதம் நடைபெறும். பயிற்சி பெற விரும்புகின்ற விவசாயிகள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## மலசலகூடம் மானிய உதவிக் காசோலைகள் வந்தன

தென்மராட்சி,மார்ச்28

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மலசலகூடம் அமைப்பதற்கான மானிய உதவி கோரி 1999 ஆம் ஆண்டு விண்ணப்பித்த 64 பேருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் மந்திகை ஆஸ்பத்திரியில் இயங்கும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை சம்பந்தப்பட்டோர் நேரில் வந்து காசோலையினைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிமனைப் பொறுப்பதிகாரி து. கிளிண்டன்ஸ் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே 24 பேருக்கு கொடுப்பனவுக் காசோலைகள் இம் மாதம் முற்பகுதியில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல பாடசாலைகளின் அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)

## சபாநாயகர் கியூபா பயணம்

கொழும்பு,மார்ச்28

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவுக்கு தலைமை வகித்து கியூபா செல்கிறார்.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெறும் 105 ஆவது சர்வதேச நாடாளுமன்ற மாநாட்டில் இவர் பங்குபற்றுவார்.

இந்த விஜயத்தின்போது அனுரா, பிரிட்டிஷ் சபாநாயகர் மைக்கல் மாட்டினையும் சந்திப்பார். சபாநாகர் அனுராபண்டார நாயக்க கியூபாவின் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவுடன் தனிப்பட்ட பேச்சுக்களையும் நடத்துவார். (க)

# திருமண வாழ்த்து

நேற்று முன்தினம் (26-03-2001) திங்கட்கிழமை இல.170, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13 இல் உள்ள அப்பல்லோ கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்தில் இல்லற வாழ்வில் இணைந்த

**மணமகன் இராசா ~ சசிகரன் (சுவிஸ்)**

**மணமகள் இராசரட்ணம் ~ சர்மலா**

தம்பதிகளை நல்லறமே செய்து ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*தகவல்:*
அ.பஞ்சாட்சரம்
*70,பீச் றோட்,*
*காரைநகர் வீதி,*
*நவாந்துறை.*
(85964)

*வாழ்த்துவோர்:-*
திரு.திருமதி அருமைநாயகம் குடும்பம்,
திரு.திருமதி மும்மூர்த்தி குடும்பம்,
திரு.திருமதி ரவீந்திரன் குடும்பம்,
திரு.திருமதி குணசாந்தன் குடும்பம்,
திரு.திருமதி பஞ்சாட்சரம் குடும்பம்.

# பாராட்டுகின்றோம்!



**K.S.பாஸ்கரன்**

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டியில், புதிய நிர்மாணிப்பு (பிறேக் டான்ஸ்) நடனத்தில், யாழ்.மாவட்டத்தில் முதலாவது இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 2 ஆவது இடத்தையும் பெற்றுள்ள மந்திகையைச் சேர்ந்த

**K.S.பாஸ்கரன்** அவர்களின்
சேவைத்திறனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்!

அச்சுவேலி மாணவர்கள்.
(சதீஸ்குமார்,அப்பன் குழுவினர்.)
(85949)

# மொடேன் கல்வி நிலையம்

நெல்லியடி, பருத்தித்துறை.

**A/L 2003**

**கலை, வர்த்தக வகுப்புகள் பிரிவு II ஆரம்பமாகிவிட்டன.**

**குறிப்பு:** வழமையான ஆசிரியர் குழு. (85963)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 - 04 - 1934



உதிர்வு 08 - 04 - 2000

## அமரர் செல்லக்கதிரமலை குணசேகரம்

*(முன்னாள் குத லிகிதர், இலங்கைத் துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம்)*

திதி:28-03-2001

அன்புத் தெய்வமே! ஐயா நீங்கள் மறைந்து
ஆண்டொன்று ஆகிவிட்டதே! இப்போது
இங்கு நாம் வாடி நிற்கிறோம் தங்கள் நினைவில்.
ஈரம் இன்னும் உலரவில்லை எம் கண்ணில்.
உலகிலிருந்து விடைபெற்ற தாங்கள் சென்ற
ஊரின் பெயரும் தெரியாது தவிக்கின்றோமே?
எமனாரின் பாசக்கயிறு தங்களை அழைத்ததோ?
ஏங்கும் எம் நெஞ்சத்துடிப்பும் கேட்கலையோ?
ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய ஒவ்வொரு கணமும்
விக்கினந்தீர்க்கும் அந்த மாயவரைப்
பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பாடசாலை வீதி,*
*கற்கோவளம்,*
*பருத்தித்துறை.*

தங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C/15932)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குலசேகரம் சாந்தகுமாரி

(சாந்தா)

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த குலசேகரம் சாந்தகுமாரி (சாந்தா) கடந்த (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமசாமி - இரத்தினேஸ்வரியின் அன்பு மகளும் குலசேகரத்தின்(குணம்) அருமை மனைவியும், ரமேஸ்குமார், பிரசாந்தினி, அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தகுமாரி, புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும், சுதாகர், சுஜீலன், நிரோஜன், திருமாலினி, சம்சியா ஆகியோரின் பெரியதாயாரும், திருநாவுக்கரசு, செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் நல்லம்மாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் தற்போதைய இல்லத்தில் இன்று (28-03-2001) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் நெல்லியடி ஆலங்கட்டை பொது மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:* குலசேகரம்(குணம்)
கணவர்

தற்காலிக முகவரி:-
*ராணிமில் வீதி, காளிகோயிலடி,*
*நெல்லியடி.*

நிரந்தர முகவரி:-
*மீனாட்சி அம்மன் கோயில் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

(85947)

## V.A. இராமையா

(நாதஸ்வர வித்துவான்)
(தொண்டமனாறு செல்வச்சந்நிதி, ஆவரங்கால் சிவன், தேவஸ்தானங்களின் ஆஸ்தான வித்துவான், இசைக்குயில், 'இசைஞானி' நாதஸ்வரப்புலவர்)

தொண்டமனாறு, ஆவரங்கால் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமான் அருணாசலம் இராமையா கடந்த (25.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருமலரின் அன்புக் கணவரும் தங்கவேல் (தவில்), லோகநாதன் (நாதஸ்வரம்), சக்திவேல் (சுவிஸ்), வில்வநாதன் (சுவிஸ்), தர்ஷன் (தவில், இடைக்காடு ம.வி.பழைய மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமுதநாயகி, மாலதி, சரசாங்கி (சுவிஸ்), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குருபரன், கீர்த்திகா, அனுஷன், வேணுகாந்தன், சாகித்தியன் (சுவிஸ்), பிரவீன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், சத்தியபாமா, இராஜேஸ் வரி, பாலசுப்பிரமணியம் (ஹொலண்ட்), வைத்தீஸ்வரன் (மலேசியாக் கண்ணன்), விக்கினேஸ்வரன் (கொழும்பு விக்கி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவதாரணி, பவசர்மிலி ஆகியோரின் பெரியதகப்பனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆவரங்காலிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10ஆம் கட்டையடி,*
*ஆவரங்கால்.*
(85952)

*தகவல்:-*
இ.திருமலர் (மனைவி),
பிள்ளைகள்.

( பாடசாலை விடுதியில் தீ விபத்து அனர்த்தம் )

# 58 கென்ய மாணவர் நித்திரையில் எரிந்து உடல்கள் கருகிப் பலி!

நைரோபி, மார்ச் 28

கென்யாவில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் உறங்கிக் கொண்டிருந்த 58 மாணவர்கள் எரிந்து கருகினர்; 28 பேர் எரிகாயங்களுடன் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் நைரோபியில் இருந்து, 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மட்சகோஸ் மாவட்டத்தின் கங்கோலி மிட்சர் புறநகர்ப்பகுதியில் அமைந்துள்ள உயர்தரப் பாடசாலையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சுமார் 140 மாணவர்கள் தங்கியிருந்த பாடசாலை விடுதியில், நேற்று முன்தினம் அதிகாலை பற்றிய தீ வேகமாகப் பரவியதாகவும் —

அந்தச் சமயத்தில் விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாகவும் —

அதனால் நிலைமையின் விபரீதத்தை அவர்கள் உணரும் முன்னரே விடுதியின் பல பகுதிகளிலும் தீ பரவிவிட்டதாகவும் —

பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

விடுதிக் கட்டடத்தில் தீ பரவ முன்னர், அப்பகுதியில் பெற்றோல் வாடை வீசியதாக விபத்தைநேரில் பார்த்த சிலர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலீஸ் குழுவின் தலைமை அதிகாரி இந்த விபத்து திட்டமிடப்பட்ட சதிச் செயலாக இருக்கலாம் என்று, சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவித்தார். (ஒ-6)

## தலிபான் அனுமதி

ஆப்கானிஸ்தானில் இடிக்கப்பட்ட இரு புத்தர் சிலைகளும் இருந்த பகுதிக்குச் செல்ல, விதிக்கப்பட்டிருந்த தடையை ஆளும் தலிபான்கள் விலக்கிக் கொண்டுள்ளனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர் தலிபான் தலைவர் சிலைகள் கள் உட்படப் புராதன சின்னங்களைத் தகர்க்கப் பிறப்பித்த உத்தரவையடுத்து அவற்றைப் பார்வையிடப் பொதுமக்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

## இந்தியத் சனத்தொகை 102 கோடியை தாண்டியது

புதுடில்லி, மார்ச் 28

இந்தியாவின் சனத்தொகை மார்ச் முதலாம் திகதி கணக்குப்படி 102 கோடியே 70 லட்சத்து 15 ஆயிரத்து 247என்று நேற்று முன்தினம் வெளியான புதிய சனத்தொகைக் கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கணக்கெடுப்பின்படி 53 கோடியே 12 லட்சத்து 77 ஆயிரத்து 78 பேர் ஆண்கள் என்றும் —

49 கோடியே 57 லட்சத்து 38 ஆயிரத்து 169 பேர் பெண்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்த மக்கள் தொகையில் 65 சத வீதத்துக்கும் அதிகமானவர்கள் எழுத்தறிவு பெற்றுள்ளதாகவும் கணக்கெடுப்பில தெரிய வந்துள்ளது. (ஒ)

## தானே தயாரித்த 'ரொக்கெட்'டை இந்தியா இன்று விண்ணுக்கு ஏவும்

புதுடில்லி, மார்ச் 28

இந்தியா முதன்முதலாகத் தயாரித்துள்ள 'ரொக்கெட்'' டி. எஸ். எல். வி. உந்து செலுத்து வாகனத்தை இன்று விண்ணுக்கு ஏவுகிறது.

ஸ்ரீஹரிக் கோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு நிலையத்திலிருந்து இந்த 'ரொக்கெட்' ஏவப்பட உள்ளது.

401 தொன் எடையும் 39 மீற்றர் உயரமும் கொண்ட இந்த 'ரொக்கெட்' இன்று பிற்பகல் 3-37 மணிக்கு ஏவப்பட உள்ளது

முற்றிலும் இந்தியத் தொழில் நுட்பத்தில் உருவான ''ரொக்கெட்'' ஆயிரத்து 540 கிலோ கிராம் எடையுள்ள செயற்கைக் கோள் ஒன்றை விண்ணுக்கு எடுத்துச் செல்கிறது

இத்தகைய உந்து செலுத்து வாகனங்களைத் தயாரிக்கும் ஆற்றல் பெற்ற நாடுகளின் வரிசையில் ஆறாவது நாடாக இந்தியா சேர்ந்துள்ளது. (ஒ)

உலக அரங்கில்

## பாகிஸ்தான் அணுத் திட்டத்தை கைவிடாதாம்

பாகிஸ்தானின் அணுசக்தி ஏவுகணைத் திட்டத்தை நிறுத்தும் பேச்சுக்கே இடமில்லை என்று பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் 3 ஆயிரத்து 800 கோடி டொலர் வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்த வேண்டி இருந்தாலும் நாட்டின் பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்கப் போவதில்லை என்று முஷாரப் மேலும் தெரிவித்தார்.

## பிரசாரச் செலவைக் குறைக்க இந்திய தேர்தல் ஆணையம் ஆணை

சென்னை, மார்ச் 28

இந்தியாவில் நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தல்களின் போது அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு நடத்தை விதிமுறைகளை வகுத்துள்ளது.

அரசியல் கட்சிகள், அவற்றின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தேர்தல் பிரசாரச் சமயத்தில் அலங்காரவளைவுகள் 'கட்-அவுட்டுகள்' ஆகியவற்றை வைப்பது முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும் என்று மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் பணித்துள்ளது.

அநாவசியமான வகையில் தேர்தல் பிரசாரத்துக்குச் செலவு செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது

பிரதான வீதிகளிலும்' இடங்களிலும் 'கட்-அவுட்டுகள்', அலங்கார வளைவுகளை வைப்பது, தனியார் கட்டடங்களில் அனுமதியின்றி விளம்பரம் செய்வது ஆகியவற்றை 7 ஆண்டுகளின் முன்னர் தேர்தல் ஆணையம் தடை செய்துள்ள போதிலும், சட்டத்தில் உள்ள சில பல வீனங்களைப் பயன்படுத்தி அரசியல் தொடர்ந்து அத்தகைய தவறுகளைச் செய்து வருவதாக தேர்தல் ஆணையம் சுட்டிக் காட்டியுள்ளது.

வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய, தேர்தல் அதிகாரியின் அலுவலகத்துக்கு செல்லும் போது! பெரிய அளவிலான ஊர்வலத்துடன் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையம் இத்தகைய கடும் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ள போதிலும், அரசியல் கட்சிகள் இவற்றுக்குக் கட்டுப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதே என்று கூறுப்படுகிறது. (ஒ)

## சீனாவில் வீசிய புயலுக்கு ஏழு பேர் பலியாகினர்!

பெய்ஜிங், மார்ச் 28

சீனாவில் வீசிய கடும் புயலுக்கு 7 பேர் உயிரிழந்தனர்; 250 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

குவாங்டொன் மாகாணத்தில் நேற்று முன்தினம் வீசிய புயற் காற்றினால் பஸ் ஒன்று கவிழ்ந்து குளமொன்றினுள் விழுந்ததில் இருவர் உயிரிழந்ததுடன் 39 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், பஸ் பயணிகளில் 5 பேரைக் காணவில்லை என்றும் அவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

புயலினால் மேலும் இரண்டு சாலை விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக அரச செய்தி ஊடகம் அறிவித்துள்ளது.

மாகாணத்தின் தென் மேற்குப் பகுதியில் 30 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

புயலினால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலந்த புயல் மற்றும் மழை காரணமாகத் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதால், உயிர் உடைமைச் சேதங்கள் குறித்து சரியான விவரங்கள் அறியப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ-6)


## சபிண்டீகரண - அழைப்பு

திருமதி

சதாசிவக்குருக்கள் மீனாட்சியம்மா

கடந்த 2001.03.19 திங்கட்கிழமை அன்று பாலையடி விநாயகர் ஆலய வீதி, 3 ஆம் குறிச்சி, காரைதீவில் சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரை, நினைவு கூருவதுடன், நாளை(2001 03.29) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், நண்பகல் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சித்தாந்த சிரோன்மணி
சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள்-
சோமாஸ்கந்தக்குருக்கள்.
(மகன்)
(கும்பவாளி வீரகத்தி
விநாயகர் ஆலய பிரதம குரு).

இமையாணன்,
உடுப்பிட்டி.

(85881)





பருத்தித்துறை
வியாபாரிமூலை - பழவத்தை
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய
வருடாந்த அலங்கார உற்சவம்

நிகழும் விக்கிரம வருடம் பங்குனி மாதம் 16 ஆம் நாள் நாளை (2001-03-29) வியாழக்கிழமை உற்சவம் ஆரம்பமாகி பங்குனி உத்தர தினமான 07.04.2001 சனிக்கிழமையன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற அம்பாள் திருவருள் கைகூடியுள்ளது.

மேற்படி உற்சவக் கிரியைகளை
பிரம்மஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள்.
(பிரதமகுரு. சிந்தாமணி விநாயகர் ஆலயம்-கரவெட்டி.)
அவர்கள் நிகழ்த்தி வைப்பார்கள்.

ஆலய அர்ச்சகர் இ. ரமணசர்மா

அறங்காவலர்
பொ. சின்னையா
(ஹொண்டா ராசு)

அம்பாள் அருள் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கும்
யோகாஸ் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தினர்,
மந்திகை.

(சி/15938)

## குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாண மாநகரசபையின் பிரதான நீர்த் தாங்கி, குருநகர் நீர்த்தாங்கிகளிலிருந்து பின்வரும் விவரப்படி குடிதண்ணீர் விநியோகம் நடைபெறுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**பிரதான தாங்கி:**

காலை 7-00 மணி தொடக்கம் 8-30 மணி வரை
மாலை 4-00 " 5-30 "

**குருநகர் தாங்கி:**

காலை 7-00 " 7-45 "
மாலை 4-00 " 4-45 "

இராசா தணிகாசலம்
மாநகர ஆணையாளர்

மாநகரசபை,
யாழ்ப்பாணம். (சி/15948)

## கண்ணீர் அஞ்சலி

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் தனது இறுதிக்காலம் வரை சமூகப்பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்தவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள இளைப்பாறிய சிரேஷ்ட மதிப்பீட்டு அலுவலருமான

### பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம்

அவர்களது மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காக அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஆ.சி. நடராஜா (தலைவர்)
கிராம அபிவிருத்திச் சங்கம்,
குரும்பசிட்டி.

(85956)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் சக பணியாளர்களான
திருமதி சி. அன்னலெட்சுமி
அவர்களின் பாசமிகு தந்தையாரும்
திரு. கு. சிவானந்தலிங்கம்
அவர்களின் பாசமிகு மாமனாரும் ஆகிய

### தம்பையா செல்லத்துரை

அவர்களின் மறைவை ஒட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்
(சி/15941)

## ஓராண்டு நினைவஞ்சலி



இகத்தில் 1932 – 04 – 17

பரத்தில் 2000 – 04 – 07

### திருமதி சின்னவன் வள்ளிப்பிள்ளை

திதி: சதுர்த்தி 28 . 03 . 2001

அன்பு மொழி பேசிவந்த அன்னையின் திருமுகம்
ஆண்டொன்று கனவு போல் அகன்றோடி
மறைந்ததம்மா!
மதன மொழி நின்முகம் அனைவரதும் மனத்திரையில்
மீண்டொரு கால் எம்குடியில் நீயே வந்து
உதித்திடம்மா!

பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:- சி. நவரத்தினம்
(மகன்)

தற்காலிக முகவரி:-
புலோலி தெற்கு,
சாரையடி.

நிரந்தர முகவரி:-
அல்லாரை தெற்கு,
மீசாலை.

(85954)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி வடக்கு, மார்ச் 28

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டு அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தினால் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ். பிரதேச செயலர் பிரிவும் வேலணை பிரதேச செயலர் பிரிவும் மோதுகின்றன.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே. ரூபசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராக யாழ் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கலந்துகொள்வார். (உ-39-8)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொள்வார்.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள - வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள - மாணவர்களின் நலன்கருதி நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து மாலை 6-00 மணி வரை யாழ்ப்பாணத்திற்கான விசேட பஸ் சேவை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

★ ★ ★

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களிடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

★ தெல்லிப்பழை திருவள்ளுவர் இளைஞர் கழகம் எதிர் அளவெட்டி இளங்கதிர் இளைஞர் கழகம்.

★ இளவாலை வெண்புறா இளைஞர் கழகம் எதிர் மல்லாகம் இளைஞர் கழகம். (உ-86)

★ ★ ★

மணற்காடு றோ. க. த. க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு அதிபர் திரு சி. குருகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றுவார்.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நடத்தி வரும் கலைவார நிகழ்வுகளில் நாளை வியாழக்கிழமை காலை 7மணிக்கு 4 ஆம் வருட பெண்கள் அணியினருக்கும் முதலாம் வருட பெண்கள் அணியினருக்கும் இடையிலான தாச்சிப்போட்டி நடைபெறும்.

காலை 8 மணிக்கு 4 ஆம் வருடம் ஆண்கள் அணிக்கும் 2 ஆம் வருட ஆண்கள் அணியினருக்கும் இடையிலான தாச்சிப் போட்டியும், பிற்பகல் 4 மணிக்கு 4 ஆம் வருட ஆண்கள் அணியினருக்கும் முதலாம் வருட ஆண்கள் அணியினருக்கும் இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும். (உ—6)

## சங்கானைப் பகுதியில் இரண்டு உணவகங்களை திறக்க நீதிமன்றம் தடை!

### சுகாதாரச் சீர்கேடு காரணம்

சங்கானை பட்டினப் பகுதியில் உள்ள இரு உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாலும் உணவகக் கட்டடங்கள் சுகாதார விதிகளுக்கு முரண்பட்ட விதத்தில் இருப்பதாலும் அவற்றைத் திறப்பதற்கு மல்லாகம் நீதிமன்றம் தடை விதித்திருக்கின்றது.

ஒரு உணவகத்தைத் திருத்த வேலைகள் செய்து முடிக்கப்படும்வரை திறக்கவேண்டாம் என்றும், பொது சுகாதார பரிசோதகர் திருத்த வேலைகள் குறித்துத் திருப்தி தெரிவிக்கும் பட்சத்தில் மீண்டும் திறந்து இயங்கமுடியுமென்றும் — நீதிமன்றம் உத்தரவிட்டது.

மற்றுமொரு உணவகத்தில் திருத்த வேலைகளைச் சுகாதார விதிகளுக்கிணங்கி மேற்கொள்ளும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

சங்கானை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உணவு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த வழக்குகளின் மீதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நீதிமன்றத்தில் இவ்விடயம் தொடர்பான வழக்கு அண்மையில் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-135)

## குண்டுகள் மீட்பு

கொழும்பு, மார்ச் 28

வவுனியா நகரில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் தொடர்பில் கைதாகியுள்ள நபர் ஒருவர் கொடுத்த தகவலின்படி இவ்விரு குண்டுகளும் விசேட பொலீஸ் குழுவினால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை தலைமன்னார் வீதி சோதனைச்சாவடியில் வைத்து இரண்டு இளைஞர்கள் இராணுவத்தினால் கைதாகியுள்ளனர். தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பிக்காத இவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (-3)

## யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

### க. பொ. த. உயர்தரம் - 2003

### மாணவர் அனுமதி

க.பொ.த. உயர்தரம் 2003 விஞ்ஞான, கணித, வர்த்தக, கலைப் பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 05-04-2001

(சி/15943) - அதிபர்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 19,
அத்தியாயம் 252 இன் கீழ் 2001 ஆம்
ஆண்டுக்குரிய வியாபார உத்தரவுப் பத்திரம்
பெறுவதற்கான

### அறிவித்தல்

எமது 4-12-2000 ஆம் திகதிய அறிவித்தலை நினைவூட்டும் முகமாக யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கு 2001 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை எமது சபையில் பெற்று அதனைப்பூர்த்தி செய்து எதிர்வரும் 30-04-2001 ஆம் திகதிக்கு முன்னர் சபையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பரிசிலிக்கப்பட்டு தங்களுக்கு வியாபார உத்தரவுப் பத்திரம் வழங்கப்படலாம் என சிபார்சு செய்யப்படின் அதற்கான கட்டணத்தை எதிர்வரும் 30-04-2001 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி 2001ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் குறித்த நிலையங்களுக்கு கடந்த காலங்களில் உத்தரவுப்பத்திரக்கட்டணம் செலுத்தாதவர்களும் அந்நிலுவைப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும். இது சம்பந்தமான தொழில் மாற்றங்கள், பெயர் மாற்றங்கள் அத்துடன் நிலுவைகள் சம்பந்தமான பிரச்சினைகள் இருப்பின் மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

30-04-2001 ஆம் திகதிக்குப்பின்னர் எமது சபையின் வியாபார உத்தரவுப் பத்திரம் பெறாத எந்தவொரு வியாபார நிலையமும் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அறியத் தருவதுடன் சபையில் பெறும் உத்தரவுப்பத்திரத்தை தங்கள் வியாபார நிலையங்களுக்கு முன் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதையும் 2001 ஆம் ஆண்டுக்குரிய உத்தரவுப்பத்திரம் பெறாது நடத்தப்படும் வியாபார நிலையங்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

இராசா தணிகாசலம்
மாநகர ஆணையாளர்

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
26-03-2001 (சி/15947)

# சட்டத்தரணிகளுக்கு நூலகம் ஒன்று அமைத்துத் தருமாறு வேண்டுகோள்

## யாழ்.வந்த நீதி அமைச்சு அதிகாரிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகள் நூலகம் ஒன்றை நிறுவி அதற்கான நூல்களை வழங்கவேண்டும் என்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உலகவங்கி மற்றும் நீதி அமைச்சு அதிகாரிகளிடம் யாழ்.சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்நீதிமன்றக் கட்டடத் தொகுதி மற்றும் சிறைச்சாலைக் கட்டடங்களை அமைப்பதற்கு தெரிவு செய்த இடங்களைப் பார்வையிடுவதற்கென நீதி அமைச்சின் பிரதம பொறியியலாளர் ஹேமசிறி தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

இவர்களுடன் சிறைச்சாலைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட ஒன்பதுபேர் வருகைதந்தனர்.

இவர்களை வரவேற்று யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் பஸ்ரியன் ஹோட்டலில் மதியபோசன விருந்து வழங்கியது.

மதியபோசனத்தின் பின்னர் யாழ். மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்.சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள், உலக வங்கி மற்றும் நீதி அமைச்சு அதிகாரிகள், அரச சட்டத்தரணி ம.கனேசராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சட்டத்தரணிகளுக்கான தனியான கட்டடம் ஒன்று அமைக்கப்படுவதுடன், ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டடத்தையும் புனரமைக்க வேண்டும் என்றும் -

மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் போன்றவற்றின் கட்டடங்களை அமைப்பதற்கும் உதவ வேண்டும் என்றும் -

சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட - கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக விவரமான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பினை தொடர்ந்து யாழ். நீதிமன்றுக்கு விஜயம் செய்த இந்த அதிகாரிகள் அங்கு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜாவைச் சந்தித்தனர்.

அங்கு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அக்கலந்துரையாடலில் யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி வேலைகள் முடிவடையும் வரை தற்போதைய யாழ்நீதிமன்றத்தல் உள்ள கார் மற்றும் மோட்டார் சைக்கிள், சைக்கிள் தரிப்பிடம், மலசலகூடம், தண்ணீர்த்தாங்கி போன்றவற்றைத் திருத்தம் செய்வதற்கும், சிறைச்சாலைக் கட்டடம் முடிக்கப்படும் வரை இடைக்கால ஏற்பாடாக சில நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும் நீதி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் என்று அதிகாரிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களின் புனரமைப்புப் பற்றியும் இச்சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

இச்சந்திப்புகளுக்கு முன்னதாக சுப்பிரமணியம் பூங்காவுக்கு கிழக்குப் பக்கத்திலுள்ள - நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவிருக்கின்ற - இடத்தையும், பண்ணையில் சிறைச்சாலை நிறுவப்படும் இடத்தையும் அதிகாரிகள் பார்வையிட்டனர். (உ-5)

### பதில் அமைச்சர்கள் பதவியேற்பு

நிதி மற்றும் திட்டமிடல் பதில் அமைச்சராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸூம், பாதுகாப்புப் பதில் அமைச்சராக ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும நேற்று நாடாளுமன்றில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா முன்னிலையில சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வெளிநாட்டிற்கு சென்றுள்ளதால் அவரின் பொறுப்பில் உள்ள இரு அமைச்சுக்களுக்கும் இவர்கள் இருவரும் பதில் அமைச்சர்களாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### பஸ்ஸில் வெடிப்பொருள்

கொழும்பு,மார்ச்28

கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றில் இருந்து வெடிபொருள்களை படையினர் மீட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வத்தளையில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் குறித்த பஸ்ஸின் சாரதி ஆசனத்திற்கு பின்னால் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆறு கிலோ வெடிபொருள்கள் அடங்கிய இரு பொதிகளை கண்டுபிடித்தனர். பஸ்ஸில் இருந்த 14 பயணிகளும் சாரதியும் கண்டக்டரும் வத்தளை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (உ-6)

### விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்28

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களை ஏப்ரல் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

நவரட்ணராஜா நிமால்(வட்டக்கச்சி), தாமோதரம்பிள்ளை யோகரதி (நல்லூர், பூநகரி), மருதப்பிள்ளை றேமன்,அருமைத்துரை விமலதாஸ் (இருவரும் ஆனந்தபுரம், கல்வியங்காடு) ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

இதே வேளை களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டு யாழ்நீதிமன்றுக்கு கொண்டுவரபபட்ட சின்னையா அப்புத்துரை(வல்வெட்டித்துறை), இராஜரட்ணம் பஞ்சலிங்கம்(வல்வெட்டித்துறை), கணபதி ஜெகன்(சரசாலை மத்தி) ஆகியோரை ஏப்ரல் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறு யாழ்நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (உ-5)

---

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சு

## பனை அபிவிருத்திச் சபை
## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகள் உடையவர்களிடமிருந்து விணணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கணக்காளர்

**தகைமைகள்**

**A.C.A, C.I.M.A** அல்லது **A.C.C.A** உடன் கணக்காளராக அரச சேவையில் அல்லது பிரசித்தி பெற்ற ஸ்தாபனத்தில் ஐந்து வருட அனுபவம்.

அல்லது

**A.C.A, C.I.M.A** அல்லது **A.C.C.A (Intermediate)** உடன் கணக்காளராக அரச சேவையில் அல்லது பிரசித்தி பெற்ற ஸ்தாபனத்தில் ஐந்து வருட அனுபவம்.

அல்லது

**B.Com** உடன் 10 வருட கணக்குத்துறையில் அனுபவம்.

**சம்பளத்திட்டம்**

ரூபா 86,700- 15x2,700 - 127,200 - அத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

### உள்ளகக் கணக்காய்வாளர்

**B.Com** உடன் அரச சேவையில் அல்லது பிரசித்தி பெற்ற ஸ்தாபனம் ஒன்றில் ஐந்து வருட அனுபவம். அதில் கணக்காய்வுத் துறையில் 3 வருட அனுபவம்.

அல்லது

**Diploma in Accountancy** உடன் அரச சேவையில் அல்லது பிரசித்தி பெற்ற ஸ்தாபனம் ஒன்றில் ஐந்து வருட அனுபவம். அதில் கணக்காய்வுத் துறையில் 3 வருட அனுபவம்.

**சம்பளத்திட்டம்**

ரூபா 84,240 - 10x2700- 111,240 அத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

### நிதி உதவியாளர்

வணிகமாணி பட்டத்துடன் அரசசேவையில் அல்லது பிரசித்தி பெற்ற ஸ்தாபனம் ஒன்றில் 3 வருட கணக்கியல் அனுபவம்.

அல்லது

க.பொ.த(சா.தரம்) உடன் லண்டன் அல்லது இலங்கை தொழினுட்ப நிறுவனத்தின் இறுதி புத்தகப் பதிவாளர் பரீட்சையுடன் கணக்குத்துறையில் 5 வருட அனுபவம்.

**சம்பளத்திட்டம்**

ரூபா 71,100 - 14x1,560- 93,000 அத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

சம்பந்தப்பட்ட பதவிகளுக்குரிய சம்பளத்திட்டத்தில் அனுபவத்திற்கமையவே சம்பளப்புள்ளி தீர்மானிக்கப்படும்.

**வயதெல்லை**

20.04.2001 ஆம் திகதி 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லை அரசாங்கத்துறை ஊழியர்களுக்கும், கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் பொருந்தாது.

தெரிவு செய்யப்படுபவர் யாழ்ப்பாணத்திலுள்ள சபையின் தலைமைக் காரியாலயத்திலும், கொழும்பிலுள்ள நகரக்காரியாலயத்திலும் கடமை செயக் கடப்பட்டுள்ளார்.

மேற்கூறப்பட்ட தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளுக்கு 25.04.2001 ஆம் திகதி கொழும்புக் காரியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

சுயவிவரத்திரட்டுடன் விண்ணப்பங்களையும் கல்வி, தொழில் சார் சம்பந்தமான சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களைப் பற்றிச் சிபார்சு செய்யக்கூடிய இருவரது பெயர்களையும் விலாசங்களையும் குறிப் பிட்டு 20.04.2001 ஆம் திகதிக்கு முன்பு "தலைவர், பனை அபிவிருத்திச் சபை, 244, காலி வீதி, கொழும்பு -04." அல்லது "பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, 53,கண்டி வீதி, யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

அரச ஊழியர்கள் அல்லது கூட்டுத்தாபன ஊழியர்களது விண்ணப்பங்கள் திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

22.03.2001

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
244, காலி வீதி,
கொழும்பு -4

(C/15949)

---

குண்டு வீச்சைக் கண்டித்து

# புதுக்குடியிருப்பில் கண்டனப் பேரணி

வவுனியா,மார்ச்28

வன்னியில் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் விமானக் குண்டுவீச்சைக் கண்டித்து நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பில் பெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் பேரணி யில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

புதுக்குடியிருப்பு துர்க்கா வீதி, இரணைப்பாலை, சிவன் கோயிலடி ஆகிய மூன்று இடங்களில் இருந்து புறப்பட்ட பேரணிகள் புதுக்குடியிருப்பு குழந்தை யேசு ஆலயத்திற்கு வந்து சேர்ந்தன.

அங்கு கண்டனக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

(உ-3-6)

### இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,மார்ச்28

மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இராணுவத்தினருடன் இணைந்து இயங்கிவந்த யோகானந்தன் என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டார் எனத்தெரிவிக்கப்பட்டது.

(உ-6)

---

## வாழ்த்துகின்றோம் - வாழ்த்துகின்றோம்



### பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஐயா

இதயத்தால் வாழ்த்துகின்றோம், முத்தமிழால் வாழ்த்துகின்றோம்.

அன்பிற்கு அன்பராய்
அறிவுக்குப் பேராசானாய்
பண்பிற்கு இலக்கண்மாய்
பாசத்தின் உறைவிடமாய்
எண்திக்கும் புகழ்பெற்று
எளிமையாய் வாழ்பவரே!
நீங்கள் இன்னும் பல மணிவிழாக்கள் கண்டு
அம்மை மனோன்மணியுடன் பல்லாண்டு
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

பருத்தித்துறை கலைஞர் வட்டம்.
பொ.மகாதேவா
(ஆசிரியர், இளமையின் இரகசியம்)
இரா.பஞ்சலிங்கம்
(ஆசிரியர், பாஞ்சாலி சபதம்
ஆங்கிலம், நாடகஉரு)

*பருத்தித்துறை.*

(C/15950)

---


## ஸ்ரீ வல்லிபுர போட்டோ

எதிர்வரும் 29.03.2001 படச்சுருள்களும், வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

**விற்பனைக்கு**

**FM2, FM10** கமரா, புதியரக பிளாஸ், லென்ஸ், புரோலயிற், என்லாச்சர், **B/W Roll**, பற்றிச்சாச்சர், வீடியோ பற்றி, வீடியோ லயிற் மற்றும் புகைப்படத்துறை பொருள்கள் அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

புலோலி 021-2604
நல்லூர் 070 212720

(85974)


---

## மரண அறிவித்தல்

### நாகமணி சோமசுந்தரம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சோமசுந்தரம் கோணாவில் கிளிநொச்சியில் 23.03.2001 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - இலட்சுமியின் அன்பு மகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி பொன்னுராஜா கனகம்மா, இரத்தினசிங்கம் (கிளிநொச்சி), சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவஅருள்நாதன் மற்றும் திருமதி குலசிங்கம் நவமணிதேவி (கனடா), திருமதி துரைசிங்கம், மல்லிகாதேவி, ஈஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மிதுலபவன், மிதுலஜெயன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மிதுலகாந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி இரத்தினசிங்கம் இராசமணியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோணாவில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23, குளப்பிட்டி லேன்,*
*கொக்குவில்.*

தகவல்:
பொ.சமரக்கொடி
(மருமகன் -மாஸ்ரர்)
ஈசன் (சகோதரன்)

(85977)

# கப்பல் பயணத்திற்குப் பதிவு இனி வெள்ளிக்கிழமைகளில்!

யாழ்ப்பாணம்,மார்ச்28

காங்கேசன்துறைக்கும் திருகோண மலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்யும் பயணிகளைப் பதிவு செய்யும் பணி பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை இடம் பெறும் என்று வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 10ஆம், 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள சேவைகளுக்கான பதிவுகள் நாளைமறுதினமும் -

எதிர்வரும் 17ஆம், 19ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள சேவைகளுக்கான பதிவுகள் எதிர்வரும் 6ஆம் திகதியும் -

எதிர்வரும் 24ஆம், 26ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள சேவைகளுக்கான பதிவுகள் எதிர்வரும் 13 ஆம் திகதியும் -

மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

பாதுகாப்பு அனுமதி கிடைத்துள்ளதா என்பதைத் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை பார்வையிடலாம் என்றும் -

வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பணி இடம்பெறமாட்டாது எனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ராஜகிரியவில் தமிழ்ப்பெண் கைது

கொழும்பு,மார்ச்28

கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள அரசகருமமொழித் திணைக்களத்தில் சிங்களம் படிக்கச் சென்ற இளம் தமிழ்ப் பெண் ஒருவர் படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நில அளவைத் திணைக்களத்தில் உத்தியோகத்தராகப் பணிபுரியும எஸ்கமலாசனி என்ற பெண்ணே கைது செய்யப்பட்டவராவார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் தெகிவளையில் வசித்து வருகின்றார். (உ-3)

## தப்பி ஓடிய கைதிகள் மீது சூடு

கொழும்பு,மார்ச்28

பூகொடை நீதிவான் நீதிமன்றத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் சிறைக்காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பியோடியதாகக் கூறப்படும் இரு கைதிகள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் தப்பியோடிய கைதிகளில் ஒருவர் கிணறு ஒன்றுக்குள் விழ்ந்து மரணமானார்; மற்றவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். (உ-3)

## ஒத்திவைக்க உத்தரவு

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தை ஒத்திவைக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தற்போதைய தலைவர், மாவட்ட நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக தாங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப் போவதாகக் கூறினார். (உ-6)

## ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபைக் கூட்டம்

சண்டிலிப்பாய்,மார்ச்28

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கூட்டமும் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் உட்படப் பலர் கலந்து கொள்வர்.

2001 - 2002 நிதி வருடத்துக்கான வரவு செலவுத் திட்டமும் பொதுச் சபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-135)

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருடன் நேற்றுத் தொடர்பு கொண்டபோது இந்தத் தகவல் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார்.

நாளை மறுதினம் திருச்செல்வம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருப்பதாகவும் -

அச்சமயம் அவர் விடுதலை செயயப்படுவார் எனத் தாம் நம்புவதாகவும்- சட்டத்தரணியான அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

திருச்செல்வம் தற்சமயம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3-6)

## நேரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதியை உடன் அறிவித்தால் பேச்சை ஆரம்பிக்க அரசு தயாராகவிருக்கின்றது.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவாரத்தல் கூட யுத்தநிறுத்தத்தை நாங்கள் அறிவிக்கலாம் - என்றார் அவர். (உ-3)

# 9 பேருக்கு நிரந்தர நியமனம்

தென்மராட்சி, மார்ச்28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அமைய சிற்றூழியர்களாகக் கடமையாற்றிய 9 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1999 நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள 9 பேரின் நியமனக் கடிதங்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரனால் தென்மராட்சி வலய கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் 9 பேரும் நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்துக்கு நேரில் வந்து நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு வலயக கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

✲ கந்தன் விக்னேஸ்வரன் - கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

✲ செல்லன் அழகுராசா - நாவற்குழி ம.வி.

✲ சரவணை நாகராசா - மட்டுவில் ம.வி.

✲ சின்னத்தம்பி இராஜேஸ்வரன்- நாவற்குழி ம.வி.

✲ சுப்பிரமணியம் யோகதாஸ் - பளை மத்திய கல்லூரி

✲ மாதவன் இராகவன் - பளை மத்திய கல்லூரி.

✲ சின்னத்தம்பி சிவராசா - மட்டுவில் கமலாசனி வித்.

✲ சரவணை பத்மநாதன் - மட்டுவில் ம.வி.

✲ சிதம்பரநாதன் ஞானபாஸ்கரன் - வரணி ம.வி.

(3-117)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் என்றும் -

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அறிவித்துள்ளது.

அடுத்தமாதம் முதல் அவசர தேவைக்குச் செல்வோர்களுக்கான பதிவுகள் வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் நண்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணி வரை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதத்தில் இங்கிருந்து அவசரத் தேவைகளுக்கு புறப்பட்டுச் செலவோர் பதிவு செய்யவேண்டிய திகதிகளின் விவரம் வருமாறு:-

| பயணத் திகதி | | பதிவுத் திகதி |
|---|---|---|
| 2,3,4 | - | நாளை |
| 5,6,7 | - | 3 |
| 9,10,11 | - | 5 |
| 12,13,14 | - | 10 |
| 16,17,18 | - | 12 |
| 19,20,21 | - | 17 |
| 23,24,25 | - | 19 |
| 26,27,28 | - | 24 |

(உ-3)

## விமானக் குண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"எனவே புலிகளின் முகாம்களுடன் இருக்கும் சகல தொடர்புகள் மற்றும் போக்குவரத்துக்களை பொது மக்கள் முற்றாகத் துண்டிக்க வேண்டும். புலிகளின் முகாம்கள் அமைந்திருக்கும் வீதிகளைப் பயன்படுத்துவதையும் பொதுமக்கள் தவிர்க்க வேண்டும்.

"மேலும் புலிகள் உறுப்பினர்கள் தங்கள் பிரதேசங்களில் இருந்தால் அவர்களை விலகியிருக்குமாறு அவர்களிடம் வற்புறுத்துங்கள்" - இப்படி அந்த அறிக்கையில் மேலும் கோரப்பட்டுள்ளது.

இத்தகைய பல்வேறு விடயங்கள் அடங்கிய - புலிகளுக்கு எதிரான - ஐந்து அறிக்கைகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் படையினரால் வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-6)

## 4ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைச் செயற்படுத்த அனுமதி வழங்கிய நீதிவான், இச்சம்பவம் தொடர்பான தடயப்பொருளாக சைக்கிள் ஒன்று யாழ்.பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டிருப்பதாலும் ஊரடங்குச் சட்ட நேரத்தில் இப்படுகொலைச் சம்பவம் நடைபெற்று இருப்பதாலும் பொலீஸார் இது தொடர்பாக விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது கஷ்டமானதாக இருக்க முடியாது என்று நீதிமன்றம் கருதுவதாகவும் தெரிவித்தார். (உ-5)

O/L DAY CLASS
ஏப்ரல் 02ல் ஆரம்பம்
பெயர் பதிவுகள் ஏற்கப்படுகின்றன.
(C/15939)

விக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு 2
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பிரிவு 3
ஆரம்பம்: 30.03.2001
(85910)

SUBRA (14)
SITHANKERNEY
யாழ் நகரில் முதன்முறையாக ஆங்கில மொழியில் A/L
2003 A/L
PHY. : Jeyam
Karuna
Che. : Annpu
Biol. : K.Suganthan
S.Surenthiran
Thayaparan
C.Mat: Pratheepan
05.04.200 1 Thur. - 3.00 p.m.
(C/15912)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2003 கலை, வர்த்தகம்
ஆரம்பம் :- 31.03.2001 சனி 8.00a.m.
ACC. திரு.பாலவாசன் | ECO. திரு.விக்கி | COM. திரு.நந்தீஸ்
TAMIL திரு.லிங்கம் | LOG. திரு.சயந்தன். | HIC. திரு.பத்மராஜா
HIST. திரு.அன்ரன் | GEO. திரு.ஐங்கரன் | CHRI. திரு.வசந்தன்
DRAMA திரு.மதி | I/Q திரு.அன்ரன்
(85574)

நாளை ஆரம்பம்!
A/L 2002
கணக்கீடு
திரு.S.தவா
B.Com.(Hons) (ACC.Spl.)
"பங்குடைமை"
காலை 6.30
THIGAL
இணுவில். (C/15944)

வணிகக்கல்வி
பகுதி II
2002 A/L
ஆரம்பம்:
29.03.2001 3.30 p.m.
ஆசிரியர்:
V.MURALEE
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.
(85873)

BARATHY
சித்தன்கேணி
O/L DAY CLASS
ஆரம்பம்:
29.03.2001 காலை -8.00 மணி
எமது வழமையான ஆசிரியர் குழுவினால்.
குறிப்பு: இம்முறை 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். (85875)

BITSMANS
கல்வி நிறுவனம் - மானிப்பாய்
A/L 2003
✲ கலை, ✲ வர்த்தகம், ✲ கணிதம், ✲ உயிரியல்
வகுப்புகள் அலகு 1இலிருந்து கற்பிக்கப்படும்.
ஆரம்பம்: 29.03.2001 நாளை வியாழன் 3.30p.m.
(85903)

Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka
(Affiliated to Irish International University, Dublin)
T.P.:021 - 2831 E-Mail: iis @ sltnet.lk
IIS சங்கானைக் கிளை
திறப்பு விழா
புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்: இன்று (28.03.2001) புதன் பகல் 10.00 மணி
பல்வேறு நவீன கணனித் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சங்கானைக் கிளையை இன்று (28.03.2001) புதன்கிழமை பகல் 10 மணிக்கு நிறுவன இயக்குநர் திரு.கு.விக்னேஸ் திறந்து வைப்பார். அத்துடன் கல்வி ஆண்டு 2001ற்கான கற்கை நெறிகளினை இணைப்பாளர் திரு.அ.பாலசுப்பிரமணியம் ஆரம்பித்து வைப்பார் என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
நண்பர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| Diploma Courses | Duration | Certificate Courses | |
|---|---|---|---|
| Diploma in MS Office 2000 | 5 Months | Excel | powerpoint |
| Diploma in Computer programming | 8 months | Access | Visual Basic |
| Technician Diploma in Computer Hardware | 6 Months | Word | Visual C |

✲ சகல மாணவர்களையும் கணனியுலகிற்குள் புகுத்தும் நோக்குடன் விசேட கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
✲ வார இறுதி நாள் வகுப்புகள் 31.03.2001 அன்று ஆரம்பிக்கப்படும் (C/15942)

## மரண அறிவித்தல்

### செல்வி கனகசபை வாசுகி

அச்சுவேலி தெற்கு உழவிக் குளம் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த செல்வி கனகசபை வாசுகி நேற்று (27.03.2001)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை (கனகு), காலஞ்சென்ற நித்தியலட்சுமி தம்பதிகளின் மகளும், தேவகி, தில்லைநாதன் (தில்லை), வசந்தராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவராஜா, ஜெயந்தி, கதிர்காமநாதன், ஆகியோரின் மைத்துனியும், துஷாந், பிரகிஷாந்த், பிரகாஷ், அனுராஷ், சாருதாஷ், ஜெயனிஹா ஆகியோரின் சித்தியும், கசிந்தினி, நயிர்தாஷ், திஜிதரன், விதுஷன், பானுஷன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2001)புதன்கிழமை அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*
*(வீடியோ கலாமினிக்கு அருகில்)*

தகவல்:
தில்லைநாதன்
(சகோதரன்)

(C/15951)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.